# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

டிசம்பர் 2006 ஜீவியம் 12 மலர் 8

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| வெளிநாட்டு இந்தியர்களின் சாதனைகள் | 3 |
| லைப் டிவைன் | 6 |
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | 12 |
| யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 21 |
| அருளாகி அமுதமாகி.... | 25 |
| அன்னை கல்வி | 50 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 54 |
| அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டியது | 56 |
| அன்பர் கடிதம் | 62 |
| அஜெண்டா | 63 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ வெற்றி மனதிலிருக்கிறது.

மனதை வென்றால் போதும்.

ஊரெல்லாம் அலைய வேண்டாம்.

✡ நம்பிக்கை கர்மத்தைக் கரைக்கிறது.

பணிவு திறமைகளை அகற்றுகிறது.

நம்பிக்கையால் அருள் வரும்.

வருகின்ற அருளைப் பணிவு பேரருளாக மாற்றும்.

# இம்மாதச் செய்தி

**பிரம்மம் துறவிக்கு;**

**பிரியம் நமக்கு;**

**பிரம்ம ஜனனம் பிரியமான பிரம்மம்.**



# வெளிநாட்டு இந்தியர்களின் சாதனைகள்

என். அசோகன்

இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது, வெளிநாடுகளில் சிறப்பாகச் செயல்படுகின்ற இந்தியர்கள் ஏன் உள்நாட்டில் பரிமளிப்பதில்லை? என்ற கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது. யூதர்களும், சீனர்களும் மற்றும் இந்தியர்களும் அவர்களுடைய சொந்த நாடுகளைத் தவிர வேறெங்கிருந்தாலும் நன்றாகப் பரிமளிக்கின்றனர். யூதர்கள் கடின உழைப்பு, தீவிர மத ஈடுபாடு மற்றும் அபார புத்திசாலித்தனத்துக்குப் பேர் போனவர்கள். இப்படிப்பட்டவர்கள் செல்வர்களாக விளங்குவதில் ஆச்சரியமில்லை. இதே கடின உழைப்பு சீனர்களிடமும் காணப்படுகிறது. அது மட்டுமின்றி அவர்கள் மிகவும் சுத்தமானவர்களும் கூட. அவர்களுடைய நாகரீகம் சூட்சுமம் நிறைந்ததாகும். கூட்டாளிகளிடம் மிகவும் விசுவாசமாக இருப்பார்கள். விசுவாசம், சுத்தம், கடின உழைப்பு ஆகியவை வளமைக்கு முக்கியக் காரணங்களாகும். இப்பொழுது இந்தியர்களிடம் என்ன சிறப்புகள் இருக்கின்றன எனப் பார்ப்போம்.

மேற்கண்ட சிறப்பம்சங்கள் எதுவும் இந்தியர்களிடம் பாராட்டுமளவுக்கு இல்லை. இந்திய மருத்துவர்கள் அதிகமாகப் பணியாற்றும் அமெரிக்க மருத்துவமனையில் உள்ள அமெரிக்க மருத்துவர்கள், “இந்திய மருத்துவர்களிடம் அனுபவ அறிவைவிட தியரிட்டிக்கல் அறிவு அதிகமாக உள்ளது” என்கிறார்கள். அனுபவ அறிவுக்கு ஏதுவாகச் சூழ்நிலைகள் இந்தியாவில் குறைவாக இருக்கலாம். ஆனால், சமயோசித அறிவு அதிகம். நடைமுறை அறிவில் பிறக்கும் திறமையைவிட, முறைப்படுத்திய சிந்தனைகளிலிருந்து பிறக்கும் திறமை அதிகமாகும். மேலும் இந்தியர்களுடைய அறிவுக்குப் பின்னால் ஆன்மீகப் பின்னணி உள்ளது.

ஓர் இந்தியரும், அமெரிக்கரும் ஹாலந்து நாட்டில் இயங்கும் ஒரு கம்பெனியைப் பார்க்கச் சென்றார்கள். அங்குள்ளவர்கள் திறமைசாலிகளாக இருந்தாலும் அக்கம்பெனியின் லாபம் குறைவாக இருப்பதைக்

கண்டு அமெரிக்கர் வியந்தார். இதே விஷயத்தைக் கவனித்த இந்தியர், ‘‘இந்தக் கம்பெனி ஈட்டும் லாபம் பிரான்ஸில் இருக்கும் தலைமை அலுவலகத்துக்கே போவதால், இங்குள்ளவர்களுக்கு உற்சாகம் குன்றி-யுள்ளது’’ என்றார். இந்தியரின் அனுமான சக்தியைக் கண்டு அமெரிக்கர் வியந்தார். இப்படி மனிதச் செயல்பாடுகளுக்குப் பின்னிருக்கும் நோக்கங்களை ஊடுருவிப் புரிந்து கொள்ளக் கூடிய சக்தி இருக்கும் போது அச்சக்தி நம்முடைய செயல் திறனை அதிகரிக்கிறது.

இந்தியர்களுக்குச் செயலாற்றும் அம்சம் பெரிதாக உள்ளது. ஆனால் அவர்கள் குடும்பம், மரபு, பாரம்பரியம் ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டு விடுவதால் இந்த அம்சம் முழுவதுமாகப் பரிமளிப்பதில்லை. ஆனால் அமெரிக்கர்களுக்கு இத்தகைய கட்டுப்பாடுகளோ, நிர்ப்பந்தங்களோ இல்லை. அதனால் அவர்கள் முன்னேறுகிறார்கள். இதே முன்னேற்றம் இந்தியர்களுக்கு வேண்டுமென்றால் அவர்கள் கீழ்க்கண்ட இரண்டை ஏற்க வேண்டும்:

- ✡ **அவர்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை உணர வேண்டும்.**
- ✡ **முன்னேற்றத்தைத் தடுக்கும் சமூக மற்றும் கலாச்சாரக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட வேண்டும்.**

இன்றைய நிலையில் பெரும்பாலான இந்தியர்கள் உள்ளிருக்கும் திறமைகளை உணராமலும், கட்டுப்பாடுகளை மீறும் தைரியமில்லாமலும் தான் உள்ளனர்.

இந்தியச் சமூகம் தடைகளைத் தளர்த்தி, திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்கான ஊக்கத்தையும் அளிக்கும்பட்சத்தில் நாடு முன்னேறுவதைப் பார்க்கலாம்.

மற்ற நாடுகளில் காணப்படும் சிறப்பம்சங்களைவிட இங்கே அதிகமாகவே உள்ளன. பெரிய சாம்ராஜ்ஜியத்தையே நிறுவி பேரரசாக விளங்கிய இங்கிலாந்து நாட்டுக்கு ஆளும் திறமை உள்ளது. பிரெஞ்சுக்-காரர்கள், ஆங்கிலேயர்களைப்போல் பெரிய சாம்ராஜ்யம் நிறுவவில்லை என்றாலும், அந்நாட்டுக் கலாச்சாரம் அறிவு வளர்ச்சி நிரம்பியதாக உள்ளது. ரோமாபுரி நாகரீகம் சட்டங்களை இயற்றிப் பேரரசாகத்



தலையெடுத்தது. சட்டத்தைத் தாண்டி நீதி உள்ளது. நீதியைத் தாண்டி தர்மம் உள்ளது. அந்தத் தர்மம் இந்தியாவில்தான் தோன்றியிருக்கிறது. ரஷியாவில் கம்யூனிசம் ஆதிக்கம் செலுத்திய நாள்கள் இருந்தாலும், அடிப்படையில் ரஷிய நாட்டில் ஆன்மீகம் உள்ளதாக ஸ்ரீ அரவிந்தர் அன்னை சொல்லியிருக்கிறார்.

நம் நாடோ ஆன்மீகத்தில் ஊறிய நாடாகும். அமெரிக்கா தன்னுடைய பொருளாதாரத் திறனை வைத்து, இன்று உலகில் வல்லரசாகத் திகழ்கிறது. அமெரிக்க ஐஸ்வரியம் உடலுழைப்பை ஆதாரமாகக் கொண்டது. நம் நாடோ ஆன்மீக சக்தியை ஆதாரமாகக் கொண்டது. இச்சிறப்பு இந்தியாவுக்கு மட்டுமே உரியது. இதை நாம் உணரும்பட்சத்-தில்தான் அது வெளிவந்து பரிமளிக்கும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இறைவனின் கருணை மனப்பான்மையுடன் மனிதன் போட்டியிடும் முயற்சியே பரோபகாரம்.

***பரமனுடன் போட்டியிடுவதே பரோபகாரம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

யானையின் பலம் அதன் உணவிலிருந்து கிடைக்கவில்லை. யானை சாகபட்சிணி. அது சாப்பிடுவது இலை! உணவால் உடல் வலுவடைவது உண்மையானாலும், உடலின் வலிமை அதன் அமைப்பிலிருந்து வருகிறது. அது பிறப்பிலிருந்து கிடைப்பது.

***பலம் அமைப்புக்குரியது, உணவுக்கன்று.***

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XV. The Supreme Truth-Consciousness

**Page No.132**
**Para No.2**

**The Truth-Consciousness is everywhere.**
**It is present in the universe.**
**By that the One becomes the Many.**
**It manifests its harmonies.**
**The multiplicity has infinite potentials.**
**This is a self-knowledge.**
**It is an ordering self-knowledge.**
**The potentiality is infinite.**
**Without this power of ordering, there will be chaos.**
**It will be a shifting chaos.**
**There is the play.**
**It is an unbounded chance.**
**It is uncontrolled chance.**
**There is a law of guiding truth.**
**It is a harmonious self-vision.**
**It is a pre-determining idea.**
**It is in the very seed of things.**
**It is cast out for evolution.**
**Without that law, it will be a teeming chaos.**



## 15. உயர்ந்த சத்தியஜீவியம்

**சத்தியஜீவியம் எங்குமுளது.**
**அது பிரபஞ்சத்தில் உள்ளது.**
**இதன் வழி ஏகன் அநேகனாகிறான்.**
**சத்தியஜீவியம் தன் சுமுகங்களை வெளிப்படுத்துகிறது.**
**பல்வேறு ஜீவராசிகள் அனந்தமான வாய்ப்புகளையுடையன.**
**இது தன்னைப் பற்றித் தானே அறிவது.**
**இந்த ஞானம் உலகைச் செப்பனிட வல்லது.**
**அப்படிப்பட்ட வாய்ப்புகள் அனந்தமாக வித்தாக உள்ளன.**
**இந்த முறைப்படுத்தும் சக்தியில்லாவிட்டால் ஒரே குழப்பமிருக்கும்.**
**அது குழப்பம் குழப்பமாக உருவாகும்.**
**இது லீலை.**
**இங்கு அளவுகடந்து தற்செயலாய் நடக்கும் வாய்ப்புண்டு.**
**இந்த வாய்ப்புகள் கட்டுக்கடங்கா.**
**இது உலக நிகழ்ச்சிகளை வழிநடத்தும் சட்டம்.**
**இது சுமுகமான சுயமான ஞானதிருஷ்டி.**
**முன்கூட்டியே ஏற்பட்ட முழு எண்ணம் இது.**
**பொருள்களின் வித்தாக இது உள்ளது.**
**பரிணாமம் நடக்க இது பரிமாறப்படுகிறது.**
**இந்தச் சட்டமில்லாவிட்டால், குழப்பம் அதிவேகம் பெறும்.**

**It is a chaos of uncertainty.**
**It is confused and amorphous.**
**Here is a knowledge that creates.**
**It creates and releases form and powers of itself.**
**It does not create something other than itself.**
**That law governs each potentiality.**
**It is its own vision of truth.**
**That knowledge possesses it in its own being.**
**It also has an awareness.**
**It is intrinsic.**
**It is an awareness of its relation to other potentialities.**
**It is aware of their harmonies too.**
**Such a harmony exists between them.**
**It holds all this pre-figured.**
**It is a general determining harmony.**
**The whole rhythmic Idea of a universe must contain this harmony.**
**It must be there in its very birth.**
**There is such a self-conception.**
**Therefore it must inevitably work out.**
**It works out by the interplay of its constituents.**
**It is the source of Law.**
**It is the keeper of the Law in the world.**
**For that Law nothing is arbitrary.**
**It is the expression of self-nature.**
**It is determined by the compelling truth.**
**It is the real idea that each thing is.**
**It is so in its in inception.**
**Therefore, the whole development is predetermined.**
**It is so from the beginning.**



**நிலையற்ற நிலையின் குழப்பம் இது.**
**உருவம் பெறாத, பெற முடியாத குழப்பமான நிலையிது.**
**இது சிருஷ்டிக்கும் ஞானம்.**
**தம் ரூபங்களையும், சக்திகளையும் சிருஷ்டி வெளிப்படுத்துகிறது.**
**தன்னைக் கடந்ததை அது சிருஷ்டிக்கவில்லை.**
**இந்தச் சட்டம் இந்த வாய்ப்புகளை நிர்வாகம் செய்கிறது.**
**அது தன்னுடைய சத்திய திருஷ்டி.**
**தன் சொந்த ஜீவனில் அது இந்த ஞானத்தைப் பெற்றுள்ளது.**
**அதற்கு ஒரு தெளிவும் உண்டு.**
**இது பிறப்பில் ஏற்பட்டது.**
**இதர வாய்ப்புகளுடன் உள்ள தொடர்பை அறியும் தெளிவு இது.**
**அவற்றின் சுமுகங்களையும் அது அறியும்.**
**அவற்றிடையே அப்படிப்பட்ட சுமுகங்கள் உள.**
**இத்தனையும் அது முன்கூட்டியே பெற்றுள்ளது.**
**இது பொதுவான நிர்ணயம் செய்யும் சுமுகம்.**
**பிரபஞ்சத்தில் சுமுகமான எண்ணம் இந்தச் சுமுகத்தைப் பெற்றிருக்க வேண்டும்.**

**இது அது பிறக்கும் பொழுதே அதனுள் இருந்திருக்கும்.**
**அப்படிப்பட்ட சுயமான கருத்துண்டு.**
**எனவே அது நடைமுறையில் பலன் தரும்.**
**அதன் பகுதிகள் ஒன்றோடொன்று மோதுவதால் அப்பலன் வரும்.**
**அது சட்டத்திற்கு உற்பத்தி ஸ்தானம்.**
**அது உலகில் சட்டம் இயங்க உதவுகிறது.**
**அந்தச் சட்டம் எதையும் முடிவாக ஏற்காது.**
**அது தன் சுய சுபாவத்தை வெளிப்படுத்தும்.**
**உள்ளிருந்து வற்புறுத்தும் சத்தியம் அதை நிர்ணயிக்கிறது.**
**ஒவ்வொன்றும் முழு எண்ணமாகும்.**
**ஆரம்பத்திலேயே அது அப்படி அமைந்துள்ளது.**
**எனவே இந்த முழு விபரமும் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது.**
**முதலிலிருந்தே அது அப்படியுள்ளது.**

**It is predetermined in its self-knowledge.**
**It is so at every moment in its self-working.**
**It is what it must be at each moment.**
**It is so by its own original inherent Truth.**
**It moves to what it must be at the next.**
**It is so still by its own original inherent Truth.**
**It will be at the end that which was contained in its seed.**
**It was originally intended.**

***Contd....***

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மீக முன்னேற்றம் அருளை அளவுகடந்து கொண்டு வரும். பொதுவாக அதன் அறிகுறியாகப் பெருமழை வரும்.

***அருளாக வரும் பெருமழை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னை அறிதல்:

பரிணாமத்தில் நம் நிலையை அறிய நம் பரிணாமத்தின் முறையை (process) அறிய வேண்டும். அதை அறிவதற்கு முன் உணர்ச்சியின் முறையையும், அதன் முன் சமூகத்தின் முறையையும் அறிய வேண்டும்.

***பரிணாமத்தை அறியுமுன் தன்னையும் சமூகத்தையும் அறிய வேண்டும்.***



**தான் தன்னையறிவதால் அது ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது.**
**தானே அது செயல்படும்பொழுது ஒவ்வொரு நிமிஷமும் அது அப்படியுள்ளது.**
**ஒவ்வொரு நிமிஷமும் அது அப்படியிருக்க வேண்டும்.**
**தன் பிறப்பிலேயே உள்ள சத்தியத்தால் அது அப்படியுள்ளது.**
**அடுத்தாற்போல் அது எதுவாக வேண்டுமோ அதற்கு அது போகிறது.**
**பிறப்பிலேற்பட்ட சத்தியத்தால் அது இதுவரை அப்படியிருக்கிறது.**
**அதன் விதையில் அது என்னவோ அதாக அது முடிவில் முடியும்.**
**அப்படியே அது ஆரம்பத்திலிருந்து விதிக்கப்பட்டது.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நமது கரணங்கள் வீறு கொண்ட தன்மை வாய்ந்தவை. சுமுகமாகச் செயல்படவோ, விட்டுக் கொடுக்கவோ அவற்றால் முடியாது. தானே ஒன்று சேர்ந்திணைவது இயலாத ஒன்று.

***கரணங்களை இணைப்பது பல பெண்கள் சேர்ந்து செயல்படுவது போலாகும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வையும், அதன் வாய்ப்பையும் மனிதன் தன் திறமை, நோக்கம், குறிக்கோளுக்கு ஏற்ப அனுபவிக்கிறான். அவை பல நிலைகளில் அமைந்துள்ளன. பகவான் ஸ்ரீ அரவிந்தரின் அருளும் அதே போல் பல நிலைகளில் அமைந்துள்ளது. நம் நிலையின் பல்வேறு அளவுகளையும், இன்று நாமுள்ள அளவையும் தெளிவாக அறிவது அரிதான அனுபவம்.

***நிலைகளை நிதர்சனமாக அறிவது நிர்வாணத்தைவிட உயர்ந்தது.***

# உலகம்—மோட்சம்—ஸ்ரீ அரவிந்தம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## மௌனமான சப்தம் :—

அன்பர்கட்கு மனம் நிலைப்படும் நேரம் உண்டு. அப்பொழுது சாந்தி, ஜோதி, அமைதி தெரியும். மௌனமும் அதுபோல் தெரியும். மௌனம் சிறப்பாக இருந்தால் சூழல் கனக்கும். அப்பொழுது ஒரு ரீங்காரம் எழும். மௌனம் பேசுகிறது என்று கூறுவார்கள். சுமார் 40 வருஷத்திற்கு முன் *Silence Speaks* என்றொரு புத்தகம் வெளி வந்தது. ஓம் மௌனத்தின் உற்பத்தி ஸ்தானம். ஓம் என்ற மந்திரத்தை ஒரு கோடி முறை உச்சரிக்கச் சொல்வார்கள். அதை முறைப்படி செய்தால் ஆண்டவன் தரிசனம் கிடைக்கும். அது சப்த பிரம்மம். அன்னை 1970 வாக்கில் ஒரு நாள் "ஓம்" என்ற பிரம்மாண்ட ஒலியைக் கேட்டு மேற்கொண்டு விசாரித்ததில் நடுக்கடலில் கப்பல் நிலையிலிருந்து புறப்பட்ட பொழுது "ஓம்" என ஒலித்தது என்றார்.

### மௌனம் ஒலிக்கும்.

மௌனமும் சப்தமும் எதிரானவை. ஆன்மீகச் சட்டப்படி சப்தம் மௌனத்துள்ளிருந்து எழுகிறது. உலகமே ஓம் என்ற ஒலியிலிருந்து எழுவதால், ஓம் மௌனத்தின் உறைவிடம் என்பதால், சப்தம் ஒலியிலிருந்து எழுவது ஆச்சரியமில்லை. மௌனமும், சப்தமும் எதிரானவை என்பதை ஏற்கலாம். மௌனத்திலிருந்து சப்தம் எழுகிறது என எப்படிச் சொல்வது? யோகத்தில் ஓரளவு முன்னேற்றம் பெற்ற எவரும் உள்ளே மௌனம் சேர்வதைக் காண்பர். அந்த மௌனம் சக்தி வாய்ந்தது. நம் செயலை சக்தியால் நிரப்புவதை அறிவர்ன பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது பழமொழி. கட்டுப்படாத பிள்ளைகள், தொண்டர்கள் உண்டு. அவர்களை முயன்று அதிகாரம் செய்து



கட்டுப்படுத்துவார்கள். தலைவர் அதிகாரத்திற்கு, தகப்பனார் கோபத்திற்குப் பயப்படுவார்கள். பயம் கட்டுப்படுத்தும். அதிகாரத்—தைச் செலுத்தாத இடத்தில் ஆர்ப்பாட்டமிருக்கும். அதிகாரம் அளவு கடந்திருந்து செலுத்த மறுக்கும் இடத்தில் வழக்கத்திற்கு அதிகமாக அமைதியும் கட்டுப்பாடும் இயல்பாக இருக்கும் இடங்கள் உண்டு. அன்பான தலைவர், பண்பான தகப்பனார் அதிகாரத்தைச் செலுத்துவதில்லை, செலுத்த நினைப்பதில்லை, செலுத்துவது பண்பற்ற செயல்என உணருமிடத்தில் அமைதி, மௌனம், ஒழுங்கு, கட்டுப்பாடு அளவு கடந்திருக்கும்.

- அந்த அதிகாரம் மௌனத்திலிருந்து எழுகிறது.
- அதிகாரம் சப்தமானது, சப்தம் போன்றது.
- சப்தம் மௌனத்திலிருந்து எழும். அது மௌனமான சப்தம்.
- *The Life Divine* இல் Silence sustains activity என்ற வரியுண்டு.
- மௌனம் கனத்தால் செயல் சிறக்கும்.
- ஒலி பேரொலியாக மௌனம் கனக்க வேண்டும்.

நம் ஊரில் கடைத்தெருவில் சப்தம் அதிகம். மேல்நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் நடமாடும் தெருவிலும், நூற்றுக்—கணக்கான கார்கள் ஓடும் ரோட்டிலும் மௌனம் சிறப்பாக உண்டு. அந்நாட்டுச் செல்வம் அவர்கள் அதிகமான உற்பத்தித் திறனால் ஏற்படுத்தப்பட்டது. இந்த அதிகபட்ச செல்வத்தின் அஸ்திவாரம் மௌனம், physical silence, ஜட மௌனமாகும். நாடு சுபிட்சமானால் ஒலி அடங்கி மௌனம் நிலவும்.

## பகுதியான முழுமை

இதற்கு உதாரணமாக எழுதியவை ஓர் அம்சத்தில் பொருந்தும். முழுவதும் பொருந்தாது. நம் உடல் செல்களாலானது. ஒவ்வொரு செல்லுக்கும் உடலின் அமைப்புண்டு. ஒரு செல்லை எடுத்து வளர்த்தால் அதன் முழுப்பகுதியாகும் என்று இன்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எந்தப் பகுதியின் செல்லும் – உதாரணமாக கண் – வளர்ந்து (கண்ணாகும்) அப்பகுதியாகும். இதுவும் முழுவதும் பொருத்தமான உதாரணமாகாது. அணு அப்—

பொருளின் சிறு உருவம். அணுவைப் பிளந்தால் பிரம்மாண்டமான சக்தி வெளி வருகிறது. இங்கும் பகுதியின் முழுமையில் ஓர் அம்சம் வெளிப்படுகிறது. இந்த சக்தி அழிக்கப் பயன்படுவது போல், ஆக்கவும் பயன்படும். தத்துவப்படி

- அணுவில் உலகம் உள்ளது.
- அதன் சக்தி வெளிப்பட்டால் அனந்தமான சக்தி எழும்.
- ஆத்மா வளரும் பொழுது ஒரு பகுதியில் அது வெளி வந்தால் அதன் முழுமையைவிடப் பெரியதாகும்.

மக்களாட்சியில் எல்லோரும் இந்நாட்டு மன்னராகலாம் என்பதால் எந்த ஒரு மனிதனும் தன் அரசியல் உரிமைக்குத் திறனளிக்க முடியுமானால், அவன் நாட்டின் தலைவனாகிறான். நாடு ஒருவனில் தலைவனாக உருவாகிறது. பகுதியான மனிதன் தன் அரசியல் ஆத்மாவைக் கண்டு வெளிப்படுத்துவதில் நாட்டின் முழுமை பெறுகிறான்.

## அரூபமான ரூபம்

ரூபம் அரூபத்திற்கு எதிரான கருத்து. களிமண்ணுக்கு ரூபமில்லை. அதிலிருந்து செய்யப்படும் பானைக்கு ரூபமுண்டு. பானையின் ரூபம் களிமண்ணின் ரூபமற்ற நிலை – அரூபத்துக்கு எதிரானது. ஆனால் பானையின் ரூபம் களிமண்ணின் ரூபமற்ற நிலையிலிருந்து எழுவதால்,

**அரூபம் ரூபத்தை வெளிப்படுத்துகிறது என்றாகும்.**

நாட்டில் சர்க்கார் உண்டு. சமூகம் உண்டு. சமூகப்பண்பை ஏற்று முறையாகக் குடும்பம் செய்பவர் சமூகத்தைச் சார்ந்தவர். சர்க்காரும், குடும்பமும், சமூகப்பண்பும் சமூகத்தின் ரூபங்கள். இவற்றிற்கெல்லாம் புறம்பானவையும் சமூகத்தில் உண்டு. அது ரூபத்திற்கு எதிரானது. குடும்பமில்லாமல், சமூகக் கட்டுப்பாட்டை ஏற்காமல் உள்ள மக்களும் சமூகத்தில் உண்டு. நாம் அவர்களை பதர்என நினைத்து விலக்குகிறோம். ரூபத்திற்கு ஜீவன் உண்டு. ரூபமற்றதற்கும் ஜீவன் உண்டு. ஜீவன் உண்டு என்றால் ஆத்மா



விழித்துச் செயல்படும் நேரம். சமூகம் முன்னேறும்வரை ஆத்மா சமூகத்தின் ரூபம் மூலம் செயல்படும். சமூகம் முன்னேற மறுத்தாலும், முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தாலும் ஆத்மா அதை விட்டு நகரும். அரூபத்துள் ஆத்மா விழிக்கும். அரூபம் ஜீவன் பெறும். அதற்குச் சமூகத்தைவிட அதிகப் பலம் வரும். சமூகத்தையே அழித்துப் புதிய சமூகம் ஏற்படுத்தும். நாம் இதைப் புரட்சி என்கிறோம். அரூபமான, ஒதுக்கப்பட்ட பகுதிகள் சமூகத்தின் ஒரு தாழ்ந்த பகுதி. சமூகம் மலை. இது கடுகு. ஆத்மா இப்பகுதியில் விழித்துச் செயல்பட்டால், சமூகத்தைவிடப் பெரிய பலம் பெறும். இதைப் பகுதி முழுமையைவிடப் பெரியது என்கிறோம்.

## ONE AND THE MANY ஏகன் – அநேகன்

சிருஷ்டி ஆனந்தத்திற்காக ஏற்பட்டது. ஆனந்தம் எழ லீலை வேண்டும். ஜீவனில், ஜீவியத்தில், ஆனந்தத்தில் லீலையுண்டு. ஊரில் அநேக விசேஷங்கள் தேர்தல், திருமணம், விழா, வெளியூர் சுற்றுலா அதிகமாக இருந்தால் வாழ்க்கை சுறுசுறுப்பாக இருக்கும். லீலை அதிகமானால் ஆனந்தம் அதிகமாகும், பரமாத்மா பரமாத்மாவாகவே இருந்தால் லீலையில்லை. ஆனந்தம் குறைவு. பரமாத்மா, ஏராளமான ஜீவாத்மாக்களானால், பரமாத்மாவுக்கும், ஜீவாத்மாவுக்கும் ஜீவன் பரிமாறிக் கொள்கிறது. ஜீவாத்மாக்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்கின்றனர். அது ஜீவியத்திலும் உண்டு, ஆனந்தத்திலும் உண்டு. ஒரு மரத்துண்டை இரண்டாக்கலாம், 4 ஆக்கலாம். அவை மீண்டும் கூடாது. இது பிரிவினை. ஒருவர் பல கடமைகளை ஏற்றால் – தகப்பனார், தலைவர், முதலாளி – அவர் பிரிவதில்லை. அம்சம் பிரிகிறது, அங்கம் பிரிவதில்லை. நமக்குப் பல திறமைகள் எழுகின்றன. அவை 10 ஆக இருக்கலாம், 100 ஆக இருக்கலாம். திறமைகள் அதிகப்படுவதால், மனிதன் பல பாகங்களாகப் பிரிக்கப்படுவதில்லை. அதிகமான திறமைகள் வாழ்வை அதிகமாக அனுபவிக்கப் பயன்படும்.

- இதைப் பிரியாத பிரிவினை எனலாம் (differentiation and not division).
- பிரிந்த பகுதிகள் அடிப்படையில் ஒன்றானவை. 50 திறமைகள் பிரிந்து தோன்றினாலும், அடிப்படை மனிதன்

ஒருவனே.

- திறமைகள் பிரிந்தால் மனிதனும் அதுபோல் பிரிந்து விடுகிறான்எனப் புரிந்து கொண்டால், நூல் புரியவில்லை எனத் தோன்றும்.
- மனம் பிரிக்கிறது (divides). சத்தியஜீவியம் பிரிப்பது differentiation.
- சத்தியஜீவியச் செயலை மனத்தால் புரிந்து கொள்ள முயன்றால் குழப்பம் எழும்.

## நிலையான சலனம்

இதை ஸ்தாணுஎனக் கூறுவர். ஓடும் ரயிலில் நாம் தந்திக் கம்பங்களைக் காணும் பொழுது, நிலையாகத் தோன்றுவது போல் உலகம் நிலையாக இருக்கிறது. நிலையானது சத். அசைவது சக்தி. சலனமாக நாம் காண்பது நிலையானது. நிலையானதாக உள்ள சத் சலனமான சக்தியாக இருக்கிறது. சலனம் காலத்துள்ளும், நிலையானது காலத்தைக் கடந்தும் உள்ளது. மூன்றாம் நிலை காலத்துள் இவை இணைந்துள்ளன. மௌனத்துள் உள்ள சப்தம் போல் ஸ்தாணுவில் சலனம் உள்ளது. ஸ்ரீ அரவிந்தம் உலகில் மலர்ந்தால் இரண்டும் இணைந்து செயல்படும் அற்புதம் தெரியும்.

## அகண்டமான கண்டம் INFINITY IN THE FINITE

தத்துவத்தில் good, evil, Goodஎன ஒரு கருத்துண்டு. Good என்பது Self-existing good எனப்படும். நமக்கு நல்லது, கெட்டதுஎன இரண்டுண்டு. கெட்டதற்ற நல்லது ஒன்றுண்டுஎன நம் அறிவுக்கெட்டாது. ஒளியும், இருளும் நாமறிவோம். இருளற்ற ஒளியென ஒன்றுண்டுஎன நாம் நினைப்பதில்லை. குறையும், நிறையும் உண்டு. குறையற்ற நிறை என்பது நம் அனுபவத்தைக் கடந்தது. கண்டம் சிறியது, அகண்டம் பெரியது. அகண்டம் கண்டத்துள் உண்டு. கண்டத்தையறியாத அகண்டமுண்டு என்பது ஸ்ரீ அரவிந்தத்திற்கேயுரிய கருத்துகள். உலகில் infinity என்பது finiteக்கு எதிரானது. பிரம்மத்திற்குரிய infinityக்கு எதிரான finite இல்லை என்பதால் அதை self-existing infinity என்கிறார் பகவான்.



மனிதனும் தெய்வமும் எதிரானவை. தெய்வம் மனிதனில் வெளி வந்தால் அது மனித தெய்வமாகும். அதுவே ஸ்ரீ அரவிந்த இலட்சியம். இதுவரை உலகம் காணாதது என்பதால் உதாரணம் தர இயலவில்லை. பகவான் அலிப்பூரில் கண்ட நாராயணத் தரிசனம் அகண்டமான கண்டம், மௌனமான சப்தம் வரிசைக்குரியது.

## புறமான அகம்

அகம் ஒரு பகுதி, புறம் அடுத்த பகுதி. அகம், புறத்தை உட்கொள்ளக் கூடியது. அப்படி உட்கொண்டால் அது உயரும். ஜடம் வேறு, ஆன்மா வேறு என்பது நம் கருத்து. மனம் பிரபஞ்ச ஜீவியத்திற்கு உயர்ந்தால் ஜடம் சக்தியலையாகத் தெரியும். ஆன்மாவும் சக்தியலையாகத் தெரியும். மனமும், உயிரும் சக்தியலைகளாகத் தெரியும். ஜடமும், ஆன்மாவும் சக்தியலைகளாக இருப்பதால் பிரபஞ்ச ஜீவியத்தில் அவை இணைகின்றன, அவை ஒன்றேஎன அறியலாம். அதற்கும் அடுத்த கட்டம் உண்டு. அது கடந்த நிலை, காலத்தையும், சிருஷ்டியையும் கடந்த நிலை. பிரம்மம் சிருஷ்டியில் சத்தாக மாறியது. சத் ஏற்பட்டவுடன் எதிரான அசத் ஏற்பட்டது. சத் சித்தித்த ரிஷிகள் உண்டு. அசத் சித்தித்த ரிஷிகள் உண்டு. சத் சித்தித்தபின் அதைவிட்டு அசத்தையடைந்தவர் அசத் என்ற சித்தி பெற்றவர். பகவான் சொல்வது வேறு. சத்திலிருந்து அசத்திற்குப் போக சத்தை விடவேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை. சத்தை விடாமல் அசத்தை அடைவது முழுமையை நாடுவது. சத் பகுதி, அசத் பகுதி. இரண்டில் எது சித்திப்பதும் பகுதியான சித்தி. சத் சித்தித்தபின் சத்தில் ஊன்றிய காலை எடுக்காமல் அசத்தை எட்டினால், அது சித்தித்து விட்டால், சத்தும், அசத்தும் சித்தித்ததாகும். அது முழுமை சித்தித்ததாகும். அதனால் சத் உயர்கிறது, அசத்தும் உயர்கிறது. இரண்டும் இணைகின்றன. அவை பிரம்மத்தில் இணைகின்றன. அதே போல் அகமும், புறமும், உயர்ந்து உயர்ந்த அகமாகிறது. அதுவே அகமான புறம்.

## ஆனந்தமான வலி

ஆனந்தம் அறியாமையால் வலியாகிறது. வலியை உணர்வது மனம், அதுவும் மேல் மனம். மனம் வலியைப் பொறுத்துக் கொள்ள

முடிவு செய்தால் எந்த அளவு வலியையும் பொறுத்துக் கொள்ளலாம் என்று அன்னை கூறுகிறார். மயக்கமருந்து வருமுன் காயம்பட்ட கை, காலை வெட்டி எடுத்தனர். அவற்றை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடிந்தது? வலி அளவுகடந்து அதிகரித்தால் அது ஆனந்தமாகும் என்கிறார் அன்னை. வலிக்கு அனந்தமில்லை. பொய், தீமை, குறை, இருள் போன்றவை பெரியதாகலாம், அனந்தத்தை எட்ட முடியாது (can reach immensity never touch infinity). வலியும், ஆனந்தமும் எதிரானவை. அந்த ஆனந்தத்தை பகவான் Bliss என்கிறார். இரண்டையும் கடந்த ஆனந்தம், இரண்டையும் உட்கொண்ட ஆனந்தத்தை delight என்கிறார். ரிஷிகள் கண்டது அக்ஷரப் பிரம்மம். அது பகுதியான பிரம்மம். அசைவற்றது. பிரம்மம் அசையும், அசையாமலுமிருக்கும். அது முழுமையான பிரம்மம் என்பது ஸ்ரீ அரவிந்தம்.

## அமிர்தமான விஷம்

அமிர்தம் அமர வாழ்வு தரும். விஷம் உயிரை எடுக்கும். இவை எதிரான கருத்துகள். உயிர் தரும் விஷமோ, உயிரை எடுக்கும் அமிர்தமோ உண்டா? இருள் அடர்ந்த ஒளி என்பது போல் விஷம் உயர்ந்த அமிர்தம் என்ற நிலை தத்துவத்திற்குண்டு, வாழ்க்கைக்கு ஒத்து வாராது. ஒளி அடர்ந்து, செறிந்தால் இருளாகிறது என்பது தத்துவம். விஞ்ஞானம் அதை ஆமோதிக்கும். பச்சை என்பது வெண்மையான ஒளியைப் பெற்ற இடம் பச்சை நிறத்தை மட்டும் பிரதிபலித்து மற்ற நிறங்களைக் கிரகித்துக் கொள்கிறது. அதையும் கிரகித்துக் கொண்டால் கறுப்பாகிறது. அதனால் கறுப்பான இருள் அடர்ந்த ஒளியாகும்.

## பரமாத்மாவான ஜீவாத்மா

நாம் அகந்தையை ஜீவன், அல்லது ஜீவாத்மா எனத் தவறாகப் புரிந்து கொள்கிறோம். அகந்தை அழிந்தால் அல்லது கரைந்தால் அங்கு புருஷன் வெளிப்படுகிறான். அது World Purusha பிரபஞ்ச ஆத்மா. இதைப் புறத்தில் காணலாம். அகத்திலும் காணலாம். அகத்தில் பிரபஞ்சத்தைக் கண்டால், அதனுள் ஆத்மா தெரியும்.



புறத்தில் பிரபஞ்ச ஆத்மாவாகத் தெரியும் புருஷன் அகத்தில் பிரபஞ்ச அனுபவத்துள் பிரம்மத்தின் ஆத்மாவாகத் Transcendent Purusha தெரிகிறது. அது பரமாத்மா. எனவே ஜீவாத்மாஎன நாம் அறிந்தது பரமாத்மாவாகும்.

## வலுவான பலஹீனம்

வலிமை, எளிமையுண்டு. எதிரானவை. வலிமையுயர்ந்து பண்பால் எதிரியைத் தாக்க மனம் வாராவிட்டால் அது பலஹீனமாகக் கருதப்படும். அது பலஹீனமன்று. அதன் எதிரில் அதன் வலிமையை ஏற்று உலகம் அடங்கியிருப்பதும் உண்டு.

## கோரமான அழகு

அழகு என்பது ஆனந்தத்தின் பகுதி. மனம் ஆனந்தத்தை அழகாக அறிகிறது. உயிர் ஆனந்தத்தைச் சந்தோஷமாக உணர்கிறது. ஆத்மா ஆனந்தத்தை அன்பாக அறியும். ஆனந்தம் அகம். அதன் புறம் அனந்தம். மனம், உயிர், ஆத்மா அனந்தத்தை அழகு, சந்தோஷம், அன்பாக உணர்கின்றன. அழகு என்பது ரூபம். சிறப்பான ரூபம் அழகு. (Perfect form is beauty). அழகில்லாமல் இருக்கலாம். அழகு எப்படிச் சிறப்பான ரூபமோ அதற்கெதிரான ரூபம் விகாரம், கோரம்.

- அழகும் கோரமும் எதிரானவை.
- அழகு எப்படிக் கோரமாக இருக்க முடியும்?

நிலைக்கேற்ப ரூபம் மாறும். நிலைகள் பல. ரூபங்களும் பல. ஒவ்வொரு நிலைக்குரிய அழகுண்டு. நாம் பேசும் பாஷை அழகாக இருக்கலாம், இல்லாமலிருக்கலாம். நாம் மழலை பேசினால் அது அசிங்கமாக இருக்கும். குழந்தை பேசும் மழலை அழகு. எது நமக்கு அசிங்கமோ, அது குழந்தைக்கு அழகு. பேச்சுக்குரிய ரூபம் மழலை. தோற்றத்திற்குரிய ரூபம் அழகு. கார் டிசைன் போட கம்பனி டிசைன் என்ஜீனியர் படும்பாடு பெரியது. தோற்றம் அழகாக அமைந்து விட்டால், அதனால் கார் அதிகமாக விற்கும். Luggage stand கார் மீது வைக்க வேண்டிய அவசியம் ஒரு

சிலருக்குண்டு. அதனால் தோற்றம் விகாரமாவதைப் பொருட்—படுத்தாமல் அதை வைத்தனர். அது விகாரம் எனப் புரிந்து கொள்ளாமல், அதை அழகாக நினைத்துப் பலரும் அதை வைத்தனர். மனவளர்ச்சியற்றவர்க்கு அது அழகாகத் தோன்றும்.

- மனவளர்ச்சியற்றவர்க்குப் பிறருக்குரிய விகாரம் அழகாகும்.
- ஒருவருக்கு அழகு, அடுத்தவர்க்கு விகாரம்.
- அழகு நிலைக்குத் தகுந்தாற் போல் மாறும்.
- கோரம் அழகிற்குட்பட்டது, அழகு கோரத்திற்குட்பட்டது.

## சந்தோஷமான வருத்தம்

பகவான் ஸ்ரீ அரவிந்தர் சந்தோஷத்தின் உறைவிடம். அவரை தரிசித்தவர்கள் பல மாதம்வரை அதை உணர்வார்கள். ஆயுள் முழுவதும் அவர் வருத்தமாக இருந்தார். அதை Psychic sadness ஆத்மாவின் வருத்தம் என்கிறார். அவர் தாங்கி வந்த அருளை உலகம் ஏற்காததால், சந்தோஷத்தின் சாகரமான அவர் வருத்தப்பட்டார். ஒருவர் சந்தோஷப்படும் காரியம் அடுத்தவர்க்கு வருத்தம் தரும். ஜெயித்த கட்சி சந்தோஷப்படும் பொழுது தோற்ற கட்சி வருத்தப்படுகிறது. ஒரே நிகழ்ச்சி ஒருவருக்கு சந்தோஷத்தையும், அடுத்தவர்க்கு வருத்தத்தையும் தருகிறது. இரண்டும் ஒரேயிடத்தில் உற்பத்தியாகின்றன. சந்தோஷம், வருத்தம் என்பது மனநிலையைப் பொருத்தது. நிகழ்ச்சியைப் பொருத்தது.

## ஞானமான அஞ்ஞானம்

ஞானமும், அஞ்ஞானமும் எதிரானவை. இரண்டையும் உட்கொண்ட பெரிய நிலை ஜோதி.

*தொடரும்....*

❀❀❀



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

இந்த 93 முறைகளையும் விவரித்து எழுதினால் கட்டுரை நீளும். எல்லாம் ஏற்கனவே எழுதப்பட்டவை என்பதால், கேள்வி எழும் இடங்களுக்கு மட்டும் விளக்கம் எழுதுகிறேன். மீண்டும் மையக் கருத்தைக் கூறுகிறேன். **நாம் ஓரளவு அன்னையை அறிந்துள்ளோம். அவரைப் பற்றி முழுமையாக அறிவது கடினம். யோகம் பயின்றால் தெரியும். ஏதோ காரணத்தால் விவரமாகத் தெரியும் பொழுது "இதெல்லாம் நமக்கில்லை" என மலைப்பாகத் தோன்றும்**. அது உண்மை இல்லை. 30 ஆண்டுகட்கு முன் கனவு காணமுடியாததை இன்று ஏராளமான பேருக்குப் பலிக்கிறது. அன்னையின் சிறப்பை உச்சக்கட்டத்தில் அறிந்தவர் மலைத்துப் போவதற்குப் பதிலாக அதுவும் நமக்கு முடியும் எனக் கூறும் வாயிலாக இக்கட்டுரை எழுதுகிறேன். பேராசையால் பெரிய விஷயத்தைக் கருதுபவர் வேறு. அவர் என் பிரச்சினையில்லை. நம்மைப் போன்றவர் எட்டிய பெரிய நிலையை நாமும் எட்ட வேண்டும் என்பது நியாயமான எண்ணம். அதற்குரிய முயற்சி பலிக்கும் என்பதை இக்கட்டுரை கூறும். அதற்குரிய முறை எது என்ற கேள்விக்கு – எதுவும் முறை என்பது பதில்.

**முறை எதுவானாலும், பூரணமாகச் செய்தால் பலிக்கும் என்பதே கருத்து.**

1. **காரியம் கூடிவரும்பொழுது மேலே போக வேண்டும். Raise the rising aspiration. காரியம் கூடிவந்தவுடன் நாம் அனைத்தையும் மறந்து காரியத்தைப் பார்க்கிறோம். அந்த நேரம் நெஞ்சு ஆர்வமாக இருப்பது தெரியும். *அந்த ஆர்வம் உயரும்படி உள்ளே மனம் செயல்பட வேண்டும்.***

   காரியம் கூடிவரும் நேரம் பெரிய நேரம். *பெரிய நேரம் வந்தது பெரிய மனநிலை எழுந்ததால்.* பெரிய நேரம் தொடர நாம் பிரியப்படுகிறோம்.

அது தொடர பெரிய மனநிலை தொடர வேண்டும். காரியம் கூடிவரும் அதே க்ஷணம் மனம் பழைய நிலைக்குப் போகும்.

**2. எது உனக்குச் சிறந்த முறையோ அதை அளவுகடந்து பின்பற்று.**

இங்கு 90க்கு மேற்பட்ட முறைகளைக் கூறினேன். இதுபோல் மேலும் பல முறைகளை நாம் நினைவுகூர முடியும். நாம் எதிர்பார்க்கும் அளவுகடந்த பெரிய பலன் பெற ஒரு முறை போதும். அம்முறையைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதே நிபந்தனை. முறை சுத்தம் செய்வதாக இருக்கலாம். பெருக்கித் துடைப்பது நமக்குச் சுத்தம். சுத்தமான இடங்களை இன்று ஏராளமாகப் பார்க்கலாம். அந்தச் சுத்தமும் அடுத்த கட்டம் போக முடியும். தரையைச் சுத்தம் செய்வது; மேஜை, நாற்காலியைத் துடைப்பது; அவற்றிற்கு அடியில் துடைப்பது; வெள்ளையடிப்பது; சீப்பு, சோப்புப் பெட்டியைக் கழுவுவது; பல் விளக்கும் பிரஷ்ஷை சர்ஃப் போட்டு கழுவுவது என 10 முதல் 20 கட்டங்களை ஏற்படுத்தி, அவற்றை நிறைவேற்ற வேண்டும்.
எரிச்சல் படக்கூடாது என்பது முறையானால், எரிச்சல் மனத்திலும் எழக் கூடாது; ஒரு முறையும் உள்ளே தவறக் கூடாது.
*(உ.ம்.):* நம்மால் முடிந்ததை 100% செய்து முடித்தால், அன்னை செயல்படுவார்.

**3. சைத்தியப்புருஷன் செயல்படும்படி நடப்பது சரி.**

இதை விளக்குவது எளிது. எந்த நேரமானாலும், எந்த இடமானாலும், எந்த வேலையாக இருந்தாலும், *பிரச்சினை நினைவுக்கு வந்தவுடன், க்ஷணம் தாமதிக்காமல் அன்னையிடம் கூறுவதே இம்முறை.*

**4. மௌனம் சேர்ந்து மனம் கனத்தால், அதைப் பேச அனுமதிக்க வேண்டும்.**

மௌனம் சேர்ந்தால் பேச முடியாது. பேசினால் மௌனம் கலையும். ஆனால் மௌனம் முழுவதும் சேர்ந்தால் ஜீவன் ஆழ்ந்து, அகன்று, செறிவு பெற்று கனக்கும். அப்பொழுது பேசலாம். அது மௌனத்தைக் கலைக்காது. மௌனத்தின் பெருஞ்சக்தி சொல்மூலம் வெளிப்படுவது தெரியும். அடுத்த கட்டத்தில் அப்படிப் பேசுவதால் மௌனம் வளர்ந்து, மௌனத்தின் பின்னுள்ள மௌனமாகும்.



**5. உனக்குத் தெரிந்த அத்தனைக் கட்டுப்பாடுகளையும் (disciplines) மொத்தமாகப் பின்பற்ற வேண்டும்.**

இங்கு 93 முறைகளைக் காண்கிறோம். ஆனால் ஒருவருக்கு 8 அல்லது 10 முறை பழக்கமாக இருக்கும். *அவையனைத்தையும் முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.*

**6. கூறும் குறையை நிறைவான நினைவாக மாற்றுதல்.**

ஒருவர் மீது குறை மனத்தில் எழுகிறது. இவரை நம்ப முடியாது என நினைக்கிறோம். மனம் அதையே 10 நிமிஷம் கருதும். அத்துடன் வேறு வேலைக்குப் போகிறோம். அதற்குப் பதிலாகச் சற்று பாஸிட்டிவாக நினைத்துப் பார்த்தால், அவர் எந்த விஷயங்களில் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நம்மிடம், பிறரிடம் நடந்து கொண்டார் என்ற நினைவு வரும். குறையைப் புறக்கணித்து, இந்த நிறைவைப் பாராட்டலாம். *அடுத்த நிலையும் உண்டு. அவர் நம்மிடம் நம்பிக்கைக் குறைவாக நடப்பது நம்முள் உள்ள நம்பிக்கைக் குறைவின் பிரதிபலிப்பு என ஏற்க வேண்டும். அது நிறைவு.*

**7. வெறுப்பின் பின் இறைவன் உள்ளதைக் கவனி.**

வெறுப்பு அன்பின் தலைகீழ் உருவம் என்பது தத்துவம். அன்பு மேலுலகினின்று பொய்யான நம் உலகுக்கு வந்ததால் வெறுப்பாகத் தெரிகிறது. வெறுப்பு வெறுப்பன்று, அன்பேயாகும். நம் மனத்தில் வெறுப்பு இல்லாவிட்டால் நமக்கு வெளியில் வெறுப்பு தெரியாது.

**8. உள்ளம் அடங்கினால் உலகை உள்ளே நாடு.**

**15. உள்ளே போ. உலகம் உள்ளே தெரியும்வரை உள்ளே போ. உலகை வெளியில் காண்பதற்குப் பதிலாக உள்ளே காண்பது உண்மையை அறிவது.**

இவை பெரிய யோகப் பயிற்சிகள். பொதுவாக மனம் அடங்கவில்லை, உள்ளே போக முடியவில்லை என்பார்கள். ஆனால் பக்குவமுள்ளவர் பலர் என்பதால், அவர்கட்கு இது பலிக்கும். பலிப்பது பெரியது. *ஒருவருக்கு இது பலித்தால், இதன் மூலம் எதுவும் பலிக்கும்.* பெரியது, சாமானியர்கட்கு இல்லை என்பது உண்மை. சாமானியர்கட்கு பெரியது பலிப்பது அன்னை-யிடம் பலரும் கண்டது.

## 9. மௌனம் சிறந்து காட்சியாகும்.

உணர்ச்சியால் காட்சி பெறுபவர் அநேகர். அவர்கட்கு அக்காட்சி பலிக்கும். மனம் உணர்ச்சியைக் கடந்தது. முனிவர் மனத்தின் மௌனம் மனத்தையும் கடந்தது. காட்சி ரிஷியைச் சேர்ந்தது. ஓர் ஆபீசில் கிளார்க் மூலம் ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்கும், ஆபீசர்மூலம் நிறைவேற்றுவதற்கும் உள்ள வித்தியாசம், இந்த இரண்டு காட்சிகளுக்கும் உள்ள வித்தியாசம். மனம் மௌனமாகும்பொழுது சில சமயம் தானே கலையும். சில சமயம் உயரும். உயரும்பொழுது நாம் அதைக் கலைக்காமலிருந்தால் அது காட்சியாக மாறும்.

| | | |
|---|---|---|
| யோகி | - | ஞானம் பெற்றவர். |
| ரிஷி | - | *மௌனம் சிறந்து எழும் காட்சி.* |
| முனிவர் | - | மௌனத்திற்குரியவர். |
| மனிதன் | - | சிந்தனைக்குரிய மனம் உடையவன். |
| உணர்ச்சி | - | பெரும்பாலோர் காணும் காட்சி. |

தியானத்தில் மனம் அமைதிப்படுபவருக்கு உரிய பயிற்சி முறையிது.

## 10. காட்சியைக் கருதாதே - அதை ஞானமாக அனுமதி.

நமக்கு எட்டாதவை தோன்றுவதுண்டு. நாம் ஆசைப்படுவது வேறு, தானே தோன்றுவது வேறு. தானே தோன்றுவது ஞானம் (intuition). அவை பிறகு பெரியதாகும், தடையின்றி வளரும். தானே தோன்றும்பொழுது மனத்தின் அமைதி இது ஞானமா, ஆசையா எனக் கூறும். ஞானம் யோகிக்குரியது. யோகி ரிஷியைக் கடந்தவர். காட்சி பலிக்கும்பொழுது, அது பெரியதானால் காட்சியோடு நின்றுவிடும். அதைக் கருதாது அமைதியாக இருந்தால், காட்சி முதிர்ச்சியடைந்து ஞானம் உதயமாகும். *ஞானம் வாழ்வில் உதயமாவது அதிர்ஷ்டத்தின் எல்லைக்கு வருவதாகும்.*

*தொடரும்....*

❀❀❀





# அருளாகி, அமுதமாகி....

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

சியாமளா ராவ்

அதனால்தான் இப்போது முருகேசுவின் வீட்டில் வந்து ஸ்ரீ அரவிந்தருடன் ஜம்மென்று உட்கார்ந்திருக்கிறார்.

முருகேசு பணக்காரனா? அல்லவே. அவனுடைய வீடும் படாடோபமான பங்களாவா? இல்லவே இல்லை. இன்னும் கேட்டால், வீட்டிற்கு உபயோகமில்லாத ஒரு குடிகாரனே.

ஆனால், செல்வி மூலம் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் அவள் வீட்டிற்கு வந்தார்கள். செல்வி, பொன்னி, கணேசு, ஆண்டாளு, நால்வரின் மனமும் இணைந்து, ஒன்றுபோல கூட்டுப்பிரார்த்தனையை மனமுருகி, நெகிழ்ந்து செய்தனர். அது மட்டுமா? அந்தச் சின்னஞ்சிறு வீட்டையும் சுத்தமாக வைத்துக் கொண்டனர். சண்டையில்லை, சச்சரவில்லை. அந்த வீட்டினரின் ஒற்றுமை, தூய்மை, பிரார்த்தனை, இந்த மூன்றுமே அவர்களின் பலமாகி, அன்னையும் அவர்கள் வீட்டிற்கே வந்தும்விட்டார். முதல் கட்டமாக, முருகேசனின் தீய பழக்கத்தை அவனிடமிருந்து விரட்டியே விட்டார்.

இந்த அசாத்தியம் நடந்தது எத்தனை ஆனந்தம்! எத்தனை மகிழ்ச்சி! எத்தனை சந்தோஷம்!

இது முதல் கட்டம்தான்.

அடுத்த கட்டம் இதோ இதுதான்.

மாலதியின் வீட்டிற்கு ஐவருமே சென்றார்கள்.

அன்னை ஸ்ரீ அரவிந்தரின் அறையின் முன்னே நின்றார்கள். மெய் சோர, மனம் கனிந்து, கண்கள் மல்க வீழ்ந்து வணங்கி, விழிகளை

மூடி, சப்பணமிட்டு அமர்ந்தார்கள். எவரும் அவர்களைத் தொந்தரவு செய்யாமல் விலக, மாலதி மட்டும் அவர்களோடு தியானித்தாள்.

மாலதியிடம் முதலிலேயே செல்வி, வீட்டில் நடந்தவற்றையெல்லாம் கூறியிருந்ததால் மாலதியின் மனமும் நெகிழ்ந்து போனது.

தியானம் முடிந்தவுடன் முருகேசு மாலதியின் காலில் விழப்போகச் சட்டென்று விழவிடாமல் நிறுத்தினாள் மாலதி.

"இதோ பாருங்க, நான் ரொம்ப ரொம்பச் சாதாரண மனுஷி. உங்க கூடப் பொறக்காத தங்கச்சி. என் காலுல விழறது தப்பு. உங்களுக்கு எல்லாரையும்விட அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும்தான் முக்கியம். தெய்வங்களோட முன்னே வீழ்ந்து வணங்கறதுதான் உங்களுக்கு ரொம்ப ரொம்ப நல்லது அண்ணா...."

"என்ன..... என்ன சொன்னீங்க..... அண்ணாத்தேன்னா சொன்னீங்க. அதுக்கு எனக்கு ஒரு தகுதியும் இல்லேம்மா. வேணாம். வுட்டுடுங்க. நீங்க சொல்றாப்புலல்லாம் இனிமே கேட்டு நடப்பேம்மா. ஆனா..... ஆனா..... மானம் ஒசரத்துக்கு என்னைய நினைக்காதீங்க மாலும்மா..... தேகமே நடுங்குது....."

"முருகேசுண்ணா..... நாம எல்லாருமே அன்னையையும், ஸ்ரீ அரவிந்த-ரையுந்தானே கும்புடறோம். அப்ப, நாம எல்லாருமே, ஒருத்தருக்கொருத்தர் கூடப் பொறந்த பொறப்புபோலத்தானே. அதைத்தானே சொன்னேன். சரி, அதெல்லாம் போகட்டும். அண்ணா! உங்களுக்குன்னு மாசாமாசம் ஒரு வேலை தரேன், செய்யிறீங்களா?"

தடுமாற்றத்துடனேயே, ''தங்கச்சி.....'' மேலே பேச முடியாமல் திணறினான் முருகேசு.

"பரவாயில்லை முருகேசுண்ணா. எப்பவும் போல மாலும்மான்னே கூப்பிடுங்களேன். பெரியவங்க, சின்னவங்க பெயரைச் சொல்லிக் கூப்பிடறது ஒண்ணும் தப்பில்லையே. எல்லார் வீட்டிலேயும் நடக்கிறதுதானே..... சரி, இப்ப சொல்ரேன். உங்களோட வேலையைத் தினமும் பார்க்கறீங்கதானே. அதுல லீவு எடுக்க முடியுமா? அதுவும் மாசாமாசம் ஒரு நாள், இல்லேன்னா ரெண்டு நாள் தருவாங்களா?"

"எடுக்கலாம்மா. இங்கே ஒரு கம்பெனியிலதாம்மா பார்க்கரேன். இத்தன நாளு ஒளுங்கா போனதில்லே. இனிமே அப்படியில்லே மாலும்மா. கம்பெனி ஓனர் நல்லவரு. அதனாலதான் வேலைய விட்டு எடுக்கலே.



வாரம் ஒரு நாளு லீவுதான். அதனால..... மாசம் நாலு நாளு லீவு கிடைக்கும். என்னா வேலைன்னும், எப்ப செய்யணும்னும் முன்கூட்டியே சொல்லிட்டீங்கன்னா..... ஓனருகிட்ட சொல்லிட்டு வருவேம்மா....."

''மாசாமாசம் வீடெல்லாம் சுத்தம் செய்யணும். நானும், அப்பா, அம்மாவும், செல்வியும் கூடமாட செய்வோம். ஒவ்வொரு ஞாயித்துக் கிழமையும் வாங்க, முடிச்சுடலாம். ஒண்ணாந்தேதி அப்பாவோட போயி கோயம்பேடுலேருந்து பூக்களெல்லாம் வாங்கிட்டு வரணும். அன்னிக்கு உங்களால லீவு போட முடியும்னா போடுங்க. எல்லாருமா, இங்கே பூவை அடுக்கலாம், சரியாண்ணா....."

"நிச்சியமாம்மா. மாலுகண்ணு..... என்னையும் ஒரு மனுஷனா மதிச்சு, இத்தனை அன்பா ஒறவு முறையோட கூப்டுற..... தாங்கலே சின்னம்மா....."

''என்ன சொன்னீங்க சின்னம்மாவா..... வேண்டாமே முருகேசு அண்ணா..... நான் உங்க சகோதரியாவே இருந்துட்டுப் போரேனே. அதுதான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. 'எளிமையான விசுவாசமுள்ள இதயம் ஒரு மகத்தான வரப்பிரசாதம், எனது ஆசிகள்'னு அன்னை, 'அன்னையின் மந்திரங்கள்' அப்படீங்கற புஸ்தகத்துல எழுதியிருக்காங்க. உங்ககிட்ட அது இருக்கிறதாலதான் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. உங்களுக்கும் எழுதப் படிக்கத் தெரியுந்தானே....."

வெட்கத்துடனும், சங்கடத்துடனும் தலையைச் சொறிந்தபடி நெளிந்தான் முருகேசு.

''சரி, பரவாயில்லே. உங்களுக்குப் படிக்கணும்னு ஆசையிருந்து-துன்னா..... வேலை செய்துட்டு, நேரம் இருக்கிறப்ப வாங்க, அப்பாவோ..... இல்லை நானோ கத்துத் தரோம், சரியா..... ஆ..... அப்புறமா இன்னொண்ணு சொல்ரேன். செல்வியோட, பொன்னி, கணேசுவோட படிப்பு எங்க பொறுப்பு....." மேலே பேசுமுன் குறுக்கிட்டான் முருகேசு.

"மாலும்மா..... ஒவ்வொண்ணா..... பூக்கட்றாப்புல..... எப்டிம்மா..... எப்டி? சந்தோசம் தாங்கலே மாலும்மா. அம்மா மாலுக்கண்ணு..... எனக்கும் அதுல பொறுப்பு வேணும்மா. நிச்சியமா வேணும். இத்தனை நாளுல, ஒரு தபாகூட நானு என் பசங்களுக்குன்னு ஒரு துணிமணியோ, பொஸ்தகங்களோ, சம்பளமோ கட்னதில்லே. இனிமேல் பட்டாவது ஏதாச்சும் செய்யணும்மா. அப்பத்தான் என் மனசும் அடங்கும். தப்பா பேசிட்டனா....."

“இல்லவே இல்லே. நான் என்ன சொன்னேன்னு சரியா புரிஞ்சுக்கலே. பொறுப்புதான் என்னோடதுன்னேன். அதுவும் படிப்புல. அதுக்கு அர்த்தம், நான் இங்கே இருக்கிறவரை, மூணு பேருக்குமே பாடங்களைச் சொல்லித் தருவேன். அதனால அவங்க ஸ்கூல்ல நல்ல மதிப்பெண் வாங்குவாங்கதானே. அதைத்தான் சொன்னேன். மத்தபடி, அவங்க புஸ்தகம், பள்ளிக்கு வேண்டியது என்ன கட்டணுமோ அது, சீருடை தைக்கற செலவு எல்லாமே உங்களோடதுதான். காரணம் என்ன தெரியுமா? அண்ணா! இனிமே உங்க கைக்குத்தான் முழு சம்பளமும் வரப்போறதே. அந்த தைர்யந்தான் எனக்கும். அதே தைர்யந்தான் உங்களுக்கும். புரிஞ்சுதாண்ணா.....”

“ரொம்ப ரொம்ப சரியான பேச்சுதாம்மா. சந்தோசமும் கூடிப்போச்சு மாலும்மா. உங்க நம்பிக்கையை, கண்டீசனா நான் செய்வேம்மா”.

மாமி உள்ளிருந்து சர்க்கரைப் பொங்கலை, அன்னைக்கு முன் வைத்து பிரார்த்தித்து எல்லோருக்கும் கொடுத்தார்.

சாப்பிட்டபின் வீட்டுக்குக் கிளம்பினார்கள்.

➺➺➺➺➺➺

செல்வி பத்தாவதில், அவள் பள்ளியிலேயே முதலாவது மாணவியாக வந்து பள்ளிக்குப் பெருமை சேர்த்தாள். ஆனால் மாகாணத்தில் அவளால் ஏழாவது இடத்தைத்தான் பிடிக்க முடிந்தது.

‘‘அக்கா! ஒரு பக்கம் ஸ்கூல்ல ஃபேர்ஸ்ட் நாந்தான்னாலும், மாகாணத்துல ஏழாவதுதானேன்னு இருக்குக்கா. ஆனா, இத குறையா நினைக்கலேக்கா. அன்னையோட அருளால நிச்சியமா ப்ளஸ் டூவுல நான் நிச்சியமா, ஆமாங்க்கா, நிச்சியமா மாகாணத்துலேயே முதலாவதா வரணும்னு தினமும் வேண்டிக்கிறேங்க்கா.....”

“தட்ஸ் குட். அன்னை மேல உனக்கு இருக்கிற நம்பிக்கையான பக்திக்கு, நிச்சியமா நல்லதே நடக்கும் செல்வி. சரி, இப்ப இங்கிலீஷ் உனக்குக் கஷ்டமா இல்லையே. என்னோட நல்லா பேசரே. எங்கப்பா, உன்னோட பேசறப்பவும் தப்பில்லாம பேசறதா சந்தோஷப்பட்டார். கீப் இட் அப் செல்வி”.

வெட்கத்தோடும், மகிழ்ச்சியோடும் புன்னகைத்தாள் செல்வி. பொன்னி, கணேசுவும் மிக நன்றாய் படித்தார்கள். படிப்பு, அன்னை அவர்களுக்குத் தந்த வரப்பிரசாதமாகயிருந்தது. உழைத்துப் படித்தார்கள்.



தெரியாததை, செல்வி அக்காவிடம் கேட்டுத் தெளிந்தார்கள். மாலையில் தினந்தோறும் கம்பெனியிலிருந்து முருகேசு வந்தவுடன், அவன் குளித்துவிட்டு வந்து உட்கார்ந்தவுடன், ஊதுபத்தி ஏற்றி, எல்லோருமாகக் கூட்டுப்பிரார்த்தனை செய்வதை வழக்கமாக்கிக் கொண்டார்கள். அந்த நேரம் வந்தாலே..... எல்லோர் மனதிலும் ஓர் உற்சாகம், ஒரு சந்தோஷம், ஒரு கொண்டாட்டம்.

தினந்தோறும் முருகேசுவின் வரவை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருக்கும் அவர்களின் முகம், முருகேசைக் கண்டவுடன் மலர்வதும், அவனும் பரபரப்புடன் வந்து, குளித்து, சுத்தபத்தமாய், ஊதுபத்தியை பயபக்தியோடு ஏற்றி அமர்வதும், அவனோடு அவர்களும் சிரித்தபடியே வந்து உட்காருவதும், ஒரு யாகம் போல், மனமொன்றி, பூரித்து, கூடிச் செய்தார்கள். அதனால் ஏற்பட்ட மனநிம்மதி அவர்களின் வீட்டில் மட்டுமன்று, சுற்றுப்புறத்திலும் தெரிந்தது.

நாட்களின் நழுவலில் மாதங்கள், வருடங்களாகின. அதற்கேற்ப மாற்றங்களும் வெகு நன்றாக ஏற்பட்டன.

அன்னை, ஸ்ரீ அரவிந்தரை வீட்டிற்குள் கொணர்ந்து, அவர்கள் இருவரையும் தங்கள் மனதிலேயே நினைத்து, எப்போதும் நினைவை விட்டு அகலாமல், அன்னையை ஜபிப்பதும், பிரார்த்திப்பதுமாக இருந்த முருகேசுவின் வீட்டை விட்டு அன்னை வருவாரா என்ன?

பணம், காசு, படாடோபம், ஆடம்பரம், இவைகளெல்லாம் அன்னைக்குத் தேவையேயில்லை.

ஆத்மார்த்தமான, பரிபூரணமான, மனம் நிறைந்த, மனம் கனிந்த, மனமுருகிய சரணாகதியும், சமர்ப்பணமுமே அன்னைக்கு மிகவும் உகந்தது என்பதற்கு முருகேசுவின் குடும்பமே உதாரணம். அவர்கள் தங்களையே காணிக்கையாக அன்னைக்குத் தந்ததுதான் விசேஷம்.

➺➺➺➺➺➺

செல்வி ப்ளஸ் டூவில் மாகாணத்திலேயே முதலாவதாக வந்தாள்.

பள்ளியிலும், வீட்டிலும், மாலுவின் குடும்பத்திலும் ஏகப்பட்ட மகிழ்ச்சி.

பரீட்சை முடிந்தவுடனேயே அவள் எந்தவிதமான யோசனையுமின்றி, அனாவசியமான யோசனைகளோ, எண்ணங்களோயில்லாமல், அலட்டிக் கொள்ளாமல் எப்போதும் போலவேயிருந்தாள்.

மாலதி வீட்டு வேலையும், தன் வீட்டு வேலையும் செய்துகொண்டு,

தம்பி, தங்கைகளின் படிப்பைக் கவனித்து, யதார்த்தமாகவே நடந்தாள்.

ஆமாம், அவளிடம் எந்தவிதமான சஞ்சலமுமில்லை; யோசனையும் இல்லை.

காரணம், அவள் எண்ணங்களையும், யோசனைகளையும் அன்னையிடமே சமர்ப்பித்துவிட்டதால், அவளுக்குக் கவலை என்பதே அற்றுப்போனது. நிச்சிந்தையாக இருந்ததுதான் அவளின் சிறப்பானது.

அன்று காலை மாலதியின் வீட்டிற்கு வேலைக்குப் போனதுமே, மாலதியின் வீட்டில், சாமான்களையெல்லாம் பேக் செய்வதற்காக எடுத்து வைத்தபடியிருந்தார்கள்.

“அக்கா! என்னக்கா..... ஊருக்குப் போகப் போறீங்களா? எல்லாமே எடுத்து வச்சுகிட்டு இருக்கீங்க.....”

“ஆமாம் செல்வி. ஷார்ஜாவுலேருந்து ஃபோன் வந்தது. இன்னும் ஒரு வாரத்துல வராராம். நானும், குழந்தையும் போகணும். ம்..... அது சரி, மேலே என்ஜீனியரிங் படிக்கிறதுக்காக E.C.E.க்காக அப்ளிகேஷன் கொண்டு வந்து, நீயும் அதை எழுதிக் கொடுத்தேயில்லே. அதுக்கு இன்டர்வியூ கார்டும் வந்துடுச்சு. அன்னையின் பாதத்துல வச்சுருக்கேன். நாளைக்கே இன்டர்வியூ. முடிஞ்சா நான் வரேன். இல்லேன்னா..... அப்பா கூட்டிண்டு போவார். பெஸ்ட் ஆப் லக் செல்வி”.

செல்வியின் முதுகில் சந்தோஷத்தோடு தட்டிக் கொடுத்துக் கூறிய மாலதியை நன்றியோடு பார்த்தவளின் பார்வை நேராக அன்னையிடமே சென்றது.

நேராகச் சென்றாள். வீழ்ந்து சரணாகதியாக வணங்கினாள். பிறகு பிரார்த்தனை. அதன் பிறகே இன்டர்வியூ கார்டை, அன்னையின் பாதத்திலிருந்து பவ்யமாக எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டு, மீண்டும் அன்னையை மனம் நிரம்பி நன்றி கூறினாள். இதயம் மட்டுமின்றி, அவளே சந்தோஷப்பூவாகப் பெரியதாக மலர்ந்தாள்.

“அக்கா! தேங்க்ஸ்க்கா. இந்த இன்ஜீனியரிங் படிப்புக்கு நிறைய செலவாகுமே. ஆனாலும் அன்னை அதை எப்படியாவது தருவார் என்கிற நம்பிக்கையிருக்குக்கா. அன்னையை காட்டிய உங்களுக்கும் ரொம்ப தேங்க்ஸ்க்கா”.

‘‘செல்வி! மொதல்ல அன்னைக்கு தேங்க்ஸ் சொன்னியா? அப்புறந்தான் மத்ததெல்லாம். ‘தெய்வம் மனுஷ்ய ரூபேனா’ன்னு சொல்லு-



வாங்க. தெய்வங்களெல்லாம் மனுஷங்க மூலமாத்தான் செய்வாங்கன்னு தான் அதுக்கு அர்த்தம். ஆனா, நம்ம அன்னை, மனுஷ ரூபத்துலேயே வந்த தெய்வம்மா. அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் நமக்காகவே வந்திருக்கிற மனித தெய்வங்கள். அதனாலதான் அவங்களோட கோட்பாடுகளும் நமக்கு, அதாவது மனுஷங்களுக்கு ஏத்தமாதிரி இருக்கு. செல்வி, அந்தக் கோட்பாடுகளில் சிலதைக் கடைப்பிடிச்சாலே நமக்கு அபரிமிதமா எல்லாமே கிடைக்கும் செல்வி. அதைப் புரிஞ்சுண்டீன்னா போதும், சரியா?”

“சரிக்கா. நீங்க ஊருக்குப் போறீங்கன்னதும் மனசு ஒரே ஒரு நிமிஷம் சங்கடப்பட்டது நிஜங்க்கா. உடனே அன்னைகிட்டே நான் சுயநலமா நினைச்சதுக்கு மன்னிப்பும் கேட்டுட்டேங்க்கா. அக்கா! ரெண்டு வருஷமா..... இங்கே இருந்தீங்க. அன்னையை எங்களுக்கு அறிமுகப்படுத்தினீங்க. எங்கப்பாவும் குடிக்கறதை விட்டுட்டு திருந்தி, சந்தோஷமாயிருக்கோம். ‘காட்டுவான், ஊட்டமாட்டான்னு’ சொலவடை இருக்கு. ஆனா, நீங்க காட்டினது மட்டுமில்லேக்கா, மனம் நிறைஞ்சு சொல்ரேன், பசிச்ச எங்களுக்கு வயிறார சோறும் போட்டீங்க. நல்ல வழி காட்டியிருக்கீங்க. அக்கா! உங்க குடும்பமும் எப்பவும் நல்லாயிருக்-கணும்க்கா. அம்மா எப்போதும் இதைத்தான் சொல்வாங்கக்கா”.

“சரி, அதையெல்லாம் விடு. நாமல்லாம் ஒரே குடும்பம்னுதான் சொல்லியிருக்கிறப்ப, எதுக்கு இந்த உபசாரமான வார்த்தைகள் செல்வி. அதையெல்லாம் விட்டுடு. உனக்கு ஸ்காலர்ஷிப் கண்டிப்பா கிடைக்கும். அதுக்காக அன்னையை வேண்டிக்கோ; பிரார்த்தனை பண்ணு. நான் ஊருக்குக் கிளம்பறதுக்கு முன்னாடி, ஒரு நாள் எல்லாருமா கூட்டுப்பிரார்த்தனை செய்யலாம். எல்லாம் அன்னை கிட்டே விட்டுட்டு நிம்மதியாயிருக்கலாம், புரிஞ்சுதா”.

“சரிக்கா! சாமான் பேக் பண்ண நானும் ஹெல்ப் பண்றேங்க்கா. அப்பா வந்து, நல்லா கட்டி, எல்லாம் செய்வாரு. இன்னும் ஏதாவது செய்யணும்னாலும் சொல்லுங்கக்கா.....”

‘‘நீ மட்டும் படிச்சா போதாது செல்வி. பொன்னியையும், கணேசுவையும் நீதான் நல்லா கவனிச்சு படிக்கச் சொல்லணும். அதுவும் உன்னோட கடமைன்னு நினைச்சுக்கணும். நான் ஊருக்குப் போனாலும் ஒவ்வொரு மாசமும் ரெண்டாவது வெள்ளிக்கிழமை ஃபோன்

பண்ணுவேன், சரியா? சரி வா, அதோ அந்த டப்பாவை எடேன்.....”

பரபரவென்று பேக்கிங்கிற்கு வேண்டியவைகளை அடுக்க ஆரம்பித்தார்கள்.

➙➙➙➙➙➙

அன்னையை மனதில் ஏந்திக்கொண்டு இன்டர்வியூவுக்கு மாலதியே வர, தைர்யமாகவே சென்றாள் செல்வி.

இன்டர்வியூவும் அவளுக்குச் சுலபமாகவேயிருந்தது. அன்னையே அவளுக்குப் பதில் இன்டர்வியூவில் செயல்படவேண்டும் என்கிற ஆத்மபூர்வமான பிரார்த்தனை வெகு சிறப்பாக நிறைவேறி பலித்தது.

மனது பூராவும் மகிழ்ச்சியால் நிரம்பியிருந்தது.

மாலதியிடமும், கேட்ட கேள்விகளையும், அளித்த பதில்களையும் கூற, அவளுக்குள்ளும் சந்தோஷம்.

‘‘வெரிகுட் செல்வி. நன்னா பதில் சொல்லியிருக்கே. ரொம்ப சந்தோஷமா இருக்கு. வீட்டுக்குப் போனவுடனேயே அன்னையை பிரார்த்தனை பண்ணி தேங்க்ஸ் சொல்லணும். மொதல் கட்டம் அன்னையோட அருளாலே சுலபமானதாலே, நிச்சியமா அன்னையின் கையைப் பிடிச்சுண்டு ஒவ்வொரு படியா ஏற முடியும். எப்போதும் இப்டியேயிரு, சரியா.....”

“நிச்சியமாக்கா. அன்னையின் கைகளைப் பிடிச்சுகிட்டு ஒவ்வொரு படியாக நான் முன்னேற நீங்கதாங்க்கா என் கையைப் பிடிச்சு அன்னை, ஸ்ரீ அரவிந்தர் முன்னே நிறுத்துனீங்க. உங்களைக் காட்டிய அன்னைக்கு நிச்சியமா தேங்க்ஸ் சொல்லுவேன். அதேபோல அன்னையை என்னால விடமுடியுமா? முடியாதுக்கா. அக்கா! இன்னொன்னும் சொல்றேன், எத்தனையோ நாளு ராத்திரி தூக்கம் வாராம போனா அன்னை, ஸ்ரீ அரவிந்தர் முன்னே உட்காருவேன். நான் என் மனசுலயிருக்கிறதை எல்லாம் அன்னைகிட்டே சொல்லிப் பேசுவேன்:

‘அன்னையே..... இது சரியா? நான் இப்டி நினைக்கிறது தப்பானதாயிருந்தா, என்னைத் திருத்துங்க. என்னைத் தப்பே செய்யாம பார்த்துக்கிறதும் உங்க பொறுப்பு. ஆமாம்மா. என்னோட, என் குடும்பத்தாரோட எல்லாப் பொறுப்பையும் நீங்கதான் ஏத்துக்கணும். நாங்கல்லாம் எந்த நிலையிலும், எந்த நேரத்துலேயும் தப்பான பாதையில போகாம உங்க கண் பார்வையிலேயேயிருக்கணும்மா. அந்த அருளை



நீங்க தந்தே ஆகணும்மா. அன்னையே! இந்த வீடு உங்க வீடு. நாங்க எல்லாருமே உங்களோட குழந்தைங்க. நாங்க தப்பு செஞ்சா, கண்டிச்சு திருத்துங்க. அதை எங்களுக்குப் புரியறாப்பல செய்யிங்கம்மா. என்னென்னிக்கும் நீங்கதாம்மா எங்க தெய்வம். உங்களை விட்டு நாங்க வேற பாதையை தேடக்கூடாது, தேடவேக் கூடாதுன்னு.....’ ”

மேலே பேச்சுக்கள் வாராமல் மாலதியைப் பிடித்துக்கொண்டு சத்தமின்றி கதறினாள் செல்வி.

அன்னையிடம் அவளுடைய உருக்கமும், நெருக்கமும் நன்றாகவே புரிந்தது மாலதிக்கு. அவளுடைய விழிகளும் மழையாய் நீரைப் பொழிந்தன. செல்வியின் முதுகில் ஆதரவாய், அதே சமயம் மனதுள் எழுந்த பீறிட்ட சந்தோஷத்தோடு தட்டிக் கொடுத்தாள். ஆனால், மாலதியின் கண்களோ அன்னையைப் பார்த்தன.

“அன்னையே..... நீங்களே இவளின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, நான் யார்? சாதாரணப் பிறவி. நீங்கதானே எல்லாவற்றிற்கும் சூத்திரதாரி. நன்றி அன்னையே நன்றி”.

➙➙➙➙➙➙

மூன்று வருடங்கள் என்பது மூன்று நிமிடங்களாகப் பறந்து போனது.

அவ்வப்போது மாலதி ஷார்ஜாவிலிருந்து தொலைபேசி மூலம் எல்லோரிடமும் பேசினாள். அதுவும் செல்வியின் படிப்பு பற்றியும், முருகேசு பற்றியும் தவறாமல் விசாரிப்பாள். அன்றும் அப்படித்தான்.

“அக்கா! காம்பஸ் இன்டர்வியூவில என்னை முதலாவதாக செலக்ட் செஞ்சிருக்காங்கக்கா. அன்னைகிட்ட, உங்களோட விருப்பம் என்னவோ அப்படியே ஏத்துக்கரேன்னு அந்த நேரத்துலேயே சமர்ப்பணம் செஞ்சுட்டேங்க்கா. பொன்னியும் பத்தாவது பரீட்சையில நல்லா எழுதியிருக்கிறதா சொன்னாக்கா. கணேசும் நல்லா படிக்கிறான். அக்கா! அப்பா..... இப்ப எப்படியிருக்கார் தெரியுமா? எப்ப வரப் போறீங்க? மாமா நலமா? குழந்தையை ஸ்கூல்ல சேர்த்துட்டீங்களா? இங்கேயும், உங்க வீட்டுலயும் அப்பா, அம்மா ரெண்டு பேரும் நலமாயிருக்காங்க. ஒண்ணாந்தேதி ஸிம்பல் வைக்கறோம். என்ன பரீட்சையானாலும் வீட்டு வேலையில பாட்டிம்மாவுக்கு உதவி செஞ்சுட்டுத்தான் போறேங்க்கா. கவலையேபடாதீங்க, அன்னை எல்லாத்தையும் பாத்துக்குவார். அக்கா! அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் எங்களுக்குக் காட்டிய உங்களுக்கு

ரொம்ப நன்றிக்கா. எங்க வீட்டுக்கு மட்டுமில்லக்கா, அன்னையோட பக்தர்களுக்கெல்லாம் காவல் தெய்வமாத்தான் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் இருக்காங்கக்கா. இதோ பாட்டிம்மா வந்துட்டாங்க, பேசறீங்களா.....”

மூச்சு முட்டும் அளவிற்கு சந்தோஷமான வார்த்தைகள் சரமாரியாகச் செல்வியின் குரலிலிருந்து மழையாகப் பொழிந்ததைக் கேட்டு மாலதியின் மனம் விகசித்தது.

➾➾➾➾➾➾

முருகேசு இப்போதெல்லாம் ரொம்பவும் அமைதியானவனாக மாறிவிட்டான். காலை வேளையில் பல் தேய்த்து, குளித்துவிட்டு வந்தவுடன், நேராக அவன் செல்வது அன்னையிடந்தான். ஸ்ரீ அரவிந்தரையும், அன்னையையும் வணங்கி பத்து நிமிடம் தியானம் செய்தபின் வேலைக்குப் புறப்பட்டுவிடுவான்.

செல்வி இன்ஜீனியரிங் முடித்ததும் அவனால் சந்தோஷத்தைத் தாங்க முடியவில்லை.

‘‘செல்வி கண்ணு..... எம் பொண்ணு, இந்தக் குடிகாரனோட பொண்ணு, இன்ஜீனியரா..... நம்பவே முடியலையேம்மா. எல்லாம் அன்னையோட அருள்தானேம்மா..... சந்தோஷம் தாங்கலே செல்விம்மா.....” குரல் தழுதழுத்தது.

“அப்பா! என்னிக்கோ நீங்க தவறா நடந்துகிட்டீங்கதான். அதையே நினைச்சு வருத்தப்படாதீங்கப்பா. இன்னும் அந்தக் குடியை நீங்க மறக்கலையா? உள்ளுக்குள்ளேயே சுத்திக்கிட்டு இருக்காப்பா? சொல்லுங்க..... சொல்லுங்கப்பா..... நீங்க குடிகாரனா?”

“அம்மாடி..... அப்டில்லாம் இல்லேம்மா..... என்னைய..... என்னைய போய் நீ சந்தேகப்படலாமாம்மா.....?” தளும்பும் விழிகளுடன் அவன் கூறவும், செல்வி அவன் கண்களைப் பரிவோடு துடைத்தாள்.

“அப்பா! சந்தேகப்படலே..... ஆனா..... இன்னும் ஏன், ‘குடிகாரன்’ என்கிற அடைமொழியை உங்ககிட்டேயிருந்து விலக்க முடியலே. அந்த வார்த்தைகளோ, அந்த எண்ணங்களோ உங்க மனசுல, ஒரு துளிக்கூட இருக்கக்கூடாதுப்பா. எப்போ நீங்க அன்னையோட கருணைக்கு உட்பட்டு அவங்களை ஏத்துகிட்டீங்களோ..... அப்பவே நீங்க புடம் போட்ட தங்கமா சுத்தீகரிக்கப்பட்டவங்கப்பா. அதைப் புரிஞ்சுக்கோங்கப்பா. அப்பா,



சுத்தீகரிக்கப்பட்ட நீங்க, அந்த வார்த்தையையே தூக்கி உங்க மனசுலேருந்து எறிஞ்சுடுங்க. உங்க மனசுல அந்தப் பழைய நினைவுகளையும், நிகழ்ச்சிகளையும் எண்ணி, எண்ணி மருகிப்போறதை அறவே விட்டுடுங்க. அன்னையோட அருள் உங்களுக்குத்தாம்ப்பா பூரணமா கிடைச்சிருக்கு.....”

“செல்விம்மா என்ன சொல்றே.....? புரியலே..... நிஜம்மா..... உண்மையா சொல்லு. அன்னையோட அருள் எனக்கு முழுசுமா கிடைச்சிருக்கா..... நானு..... நானு..... அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும்..... தூக்கி..... தூக்கிப் போட.....”

மேலே பேச்சு வராமல் தடைபட்டு கேவிக்கேவி அழுதான் முருகேசு.

“அப்பா..... ஆமாம்ப்பா. நாங்க அன்னையை மனமுருக வேண்டினோம்; நெஞ்சு நிறைஞ்சு தொழுதோம். ஆனா..... நீங்க..... தப்பா நடந்துக்கப் போனீங்க. அன்னைக்கு நாம எல்லாருமே குழந்தைங்கதானேப்பா. அதுதான் உங்களை, நீங்க செய்ய நினைச்சத் தவறுலேருந்து தவிர்க்க, உங்களைக் கண்டிச்சுத் திருத்தினாங்க. உங்களை பெற்ற தாய்போல நினைச்சுக் கண்டிச்சாங்க. அதே சமயம் தெய்வமாயிருந்து அருளை அள்ளி அள்ளித் தந்துருக்காங்க. இதுதானேப்பா உண்மையில நடந்துருக்கு. குழந்தைக்கு நெருப்புக்கும், மத்ததுக்கும் வித்தியாசம் தெரியாதுப்பா. ஆனா, நெருப்பைப் பார்த்து அதை எடுக்கப் போற குழந்தையைத் தடுக்கறது யாருப்பா? பெத்த அம்மாதானே பறந்தோடி, பரிதவிச்சு, நம்ம குழந்தைக்குச் சூடு தாங்காதே, கை வெந்துடுமேன்னு வாராங்க, தடுக்கறாங்க. அதே போலத்தாம்ப்பா அன்னையும், எம் புள்ள என்னைக் கோபமா திட்டறான், அடிக்க வாரான். தப்பு, பெரிய தப்பு. அவனுக்கு அது தெரியவும் இல்லே, புரியவும் இல்லே. ஏன்னா, அவனுக்குள்ளேயிருக்கிற மது அரக்கன் அவனை ஆட்டிப்படைக்கிறான். அந்த அரக்கனை நாம அழிச்சு, அதுகிட்டேயிருந்து எம் புள்ளயை விடுவிக்கணும்ங்கற எண்ணத்துலதான் அவங்க தம் கண்கள்ல மட்டும் தம் சக்தியைக் காட்டி உங்களைக் கட்டுப்படுத்தினாங்க. அதையே உங்களால தாங்க முடியலயே. நீங்க மட்டுமில்லேப்பா, யாராலயும் அன்னையோட முழு சக்தியையும் தாங்க முடியாதுப்பா. உங்களுக்காக, அந்த மது அரக்கனை அழிக்க, உங்களிடமிருந்து அந்த அரக்கனை விரட்ட, தம்முடைய மகாகாளி அவதாரத்துலேருந்து கொஞ்சமே

கொஞ்சம் தம் கண்கள்ல காட்டி உங்ககிட்டேயிருந்து ஒரேயடியா துரத்தியே அடிச்சு விரட்டிட்டாருப்பா. அப்பா, அந்த அரக்கனை உங்ககிட்டேயிருந்து துரத்தினபிறகும் நீங்க அந்த அரக்கனை உங்ககிட்டேயிருந்து விடுவிக்காம, விடுதலை தாராம, 'நான் குடிகாரன், குடிகாரன்'னு ஏம்பா உங்ககிட்டேயே அவனைக் குடி வச்சுருக்கீங்க. ரொம்ப தப்புப்பா. இனிமே அவனை உங்ககிட்டேயிருந்து விடுதலை கொடுத்து, அடிச்சு விரட்டுங்க. இனிமே உங்க பேரு குடிகாரனில்லே. உங்க பேரு முருகேசன். யாரு, என்ன வேணும்னாலும் சொல்லட்டும், கூப்பிடட்டும்; சட்டையே பண்ணாதீங்க. நாங்களும் முருகேசனோட குழந்தைங்க. இப்ப, நாம எல்லாருமே அன்னையோட குழந்தைங்கதான், புரிஞ்சுதா. உங்க பொண்ணுதான் இப்ப இன்ஜினீயராயிருக்கா, தெரிஞ்சுதா....."

மெய்சிலிர்க்க, செல்வியை அப்படியே ஆரத்தழுவி, கண்களை சொரிய விட்டதில், செல்வியின் விழிகளும் நிறைந்தன.

இருவருமாக அன்னை, ஸ்ரீ அரவிந்தரை நினைத்து மெய் மறந்தனர். பின் அவரவர், அவரவர் வேலையை கவனித்தனர்.

இவற்றையெல்லாம் பார்த்தபடியிருந்த ஆண்டாளுக்கு மட்டுமன்று, பொன்னி, கணேசும் மனம் நிறைந்து அன்னையை வேண்டி, செல்வியைக் கட்டிப்பிடித்து சந்தோஷித்தார்கள். அந்த மகிழ்ச்சி அவர்களைத் துள்ளாட வைத்தது.

➻➻➻➻➻➻

T.C.S.இல் வேலை கிடைத்தேவிட்டது செல்விக்கு. பூனாவிற்குத்தான் அவளை 'போடுவார்கள்' என எல்லோருமாய் பேசிக்கொண்டார்கள். அவள் அதற்கு எதுவுமே பதில் சொல்லவில்லை. காரணம் அன்னைதான்.

முதலில் திருவனந்தபுரத்தில் டிரெயினிங்.

நாம் பேசாமலிருக்கலாம். ஆனால், நம் உள்மனது எப்பவுமே வாயை மூடாது. சந்தர்ப்பம் கிடைத்தால் தன் வாயைத் திறந்து புலம்பவே ஆரம்பித்துவிடும். அந்தப் புலம்பலை நாம் அனுமதித்து, ஆமோதித்து, இடம் கொடுத்து, நம் செவியை அதன் புறம் சாய்த்து, அந்த வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் தந்தோமானால்..... 'மனம் என்பது குரங்கு' என்பதற்கேற்ப குரங்காட்டம்தான் ஆடிவிடுவோம். அந்தக் குரங்கை ஆட்டுவிக்கும் கயிற்றை நம் கையில் வைத்திருக்க வேண்டும்.



அந்தக் குரங்கு தறிகெட்டுப் போகும்போது, அதை இழுத்துப் பிடித்து நிறுத்தும் 'ஜாலத்தை' நாம் அறிந்திருக்க வேண்டும். இல்லையேல், நாம் மாறுவது குரங்காகத்தான், இது நிச்சயம். அதன் விளைவு குரங்கின் குரங்குத்தனம் நம்மிடம் வந்து நாமே குரங்காவோம்.

திருவனந்தபுரம் டிரெயினிங் என்றவுடனேயே செல்வியின் மனதில் ஏற்பட்ட முதல் எண்ணம் 'அங்கு அன்னையின் தியான மையம் எங்கு இருக்கிறதுஎனத் தெரிந்து கொள்ள வேண்டும். நம்முடன் அன்னையை-யும், ஸ்ரீ அரவிந்தரையும் அழைத்துப் போக வேண்டும். அங்கு எது நடந்தாலும் அன்னைக்கே சமர்ப்பணம் செய்ய வேண்டும். அன்னையை-யும், ஸ்ரீ அரவிந்தரையும் நம்மை விட்டு அகலாது இருக்க நம் மனதை, இதயத்தை, எண்ணங்களை எல்லாமே மாசற்று, துப்புறவாக வைத்துக் கொள்ள வேண்டும். இதை நாம் ஒரு தியானமாகவே நினைக்க வேண்டும், செய்ய வேண்டும். அன்னையே..... என்றென்றும் உங்கள் துணை எனக்கு வேண்டும். நான் எங்குப் போனாலும், என்னுடன் யாரிருந்தாலும், என்னுள் உறைந்திருக்கும் உங்களால்தான் நான் வழிநடத்தப்படவேண்டும். என் மனம் எதையும் கண்டு கலையாமல் வெட்டவெளியாக இருந்து நீங்கள் மட்டுமே அதனுள் இருக்க வேண்டும், அன்னையே! அன்னையே சரணம்! அன்னையே சரணம்! அன்னையே சரணம்!'

➻➻➻➻➻➻

இரண்டு மாத டிரெய்னிங்கில் செல்வி எல்லோருடனுமே வெகு அருமையாகப் பழகியதால், அனைவருமே அவளுடைய நட்பை விரும்பினார்கள். அவளுடைய தியானமும், அமைதியும், அதே சமயம் வகுப்புகளில் நேர்த்தியாக பதிலளிப்பதும் அனைவருக்குமே வியப்பைத் தந்தது. அதனால் அவளிருக்கும் குழுவிலேயே சேர வேண்டுமென ஆகர்ஷிக்கப்பட்டு விரும்பியதில், பேராசிரியர்களுக்கும் வியப்பே.

எல்லாம் நல்லபடியாய் முடிந்து வந்தாயிற்று. செல்விக்கு பூனாவில் வேலை என வந்தாயிற்று.

முருகேசுவும், ஆண்டாளும் 'ரொம்ப தூரம் மகள் போகிறாளே' என நினைத்தாலும், மகளின் சஞ்சலமற்ற நடத்தை அவர்களுக்குள்ளும் ஒரு தெம்பைத் தந்தது.

மாலதியிடமும் ஃபோனில் பேசும்போது கூறியாயிற்று. அப்போதுதான்

மாலதி கூறினாள், "செல்வி, நீ கரஸ்பாண்டென்ஸில் மேலே எம்.எஸ். படிக்க வேண்டும்மா. வேலை பார்த்துண்டே படி. உனக்கு அந்தத் திறமையிருக்கிறது. பக்கத்துணையாக அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் இருக்கும்போது, அவர்களிடம் உன் பாரத்தைக் கொடுத்துவிடு. எல்லாமே உனக்கு லேசாயிடும். நிச்சியமாய் நீ எம்.எஸ். படிக்கத்தான் வேண்டும் செல்வி. அதுவும் பிலானியில் நீ அப்ளை பண்ணு, கிடைக்கும். வேலையோடு ஸைடு பை ஸைடு படிச்சுடலாம். உன்னால முடியும் செல்வி. மொதல்ல எழுதிப்போடு, சரியா....."

மாலதி கூறியதுமே மாமியிடம் கூறினாள் செல்வி.

செல்வி திருவனந்தபுரம் போகும்போதே ஆண்டாளு பொன்னியை அவர்கள் வீட்டு வேலைக்கு அனுப்பிவிட்டதால், அவர்களுக்குப் பிரச்சினையில்லாமல் போனது.

மாமி, தன் கணவரிடம் கூறி, செல்விக்கு வேண்டிய உதவிகளைச் செய்யச் சொன்னதில், கரஸ்பாண்டென்ஸில் எம்.எஸ்.ஸிற்கு செல்வி சேர்ந்தாயிற்று. ஒரு வருடமும் ஓடிவிட்டது.

➙➙➙➙➙➙

ஒரு வாரம் லீவில் செல்வி ஊருக்கு வந்தாள். எல்லோருக்கும் துணிமணிகள், திண்பண்டங்கள் என நிறையவே கொண்டு வந்தாள். அன்னையின் ஆசியால் அவள் வனப்பாகி, அழகுற இருந்தாள்.

"செல்வி, நீயும் ஒரு வருஷமா சம்பாதிக்கரே. உன் படிப்பையும் ஒரு வருஷத்துல முடிச்சுடுவ. மேலே என்னம்மா செய்யப் போரே....."

"ஏம்ப்பா..... என்ன திடீர்னு இப்டி கேக்கறீங்க? புரியலையே. ஏம்மா, மேலே என்ன செய்வேன், வேலைதானம்மா செய்வேன். இரும்மா, ஒரு முக்கியமான விஷயம் அன்னைகிட்டே சொல்லியாச்சு. இப்ப உங்ககிட்டயும் சொல்றேன். அப்பா எனக்கு வேலை பர்மனனண்ட் ஆயிடுத்துப்பா. சம்பளமும் இப்ப இருபத்தஞ்சாயிரம் ரூபாயா உசந்திடுச்சுப்பா. அம்மா, நீங்களும் அப்பாவும் நில்லுங்க. வந்தவுடனேயே அன்னை, ஸ்ரீ அரவிந்தருக்கு மனம் நிறைஞ்சு வணங்கினேப்பா. இப்ப உங்களையும் வணங்கரேன், வாங்கப்பா".

"இல்லேம்மா..... நான் உனக்கு எதுவுமே செய்யலே. செஞ்சதெல்லாம் அன்னைதான். அவங்கள வணங்கினதே போதும்மா....."

''அப்பா! 'மாதா, பிதா, குரு, தெய்வம்'னு, தெய்வத்தை



கடைசியிலதான் வணங்கக் கூறியிருக்காங்க. ஆனா, அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் 'மனித தெய்வங்கள்'. எப்படி வாழணும், எப்படி இருக்கணும், எது கூடாது, எது நல்லதுன்னு மனுஷங்களாயிருந்து வாழ்ந்து காட்டினவங்க. தவறு செய்யிறப்போ சுட்டிகாட்டறாங்க. இப்ப நம்ம வீட்டை மாத்தினவங்களே அவங்கதானேப்பா. அதனாலதான் என்னுடைய மனசுல இருக்கிறதையும் இனிமே என் வாழ்க்கையில நடக்கப் போறதுக்கும் அவங்களையே சரணாகதின்னு வேண்டி, மனமுருக பிரார்த்தனை செய்யறேன். அதற்கு அடுத்தபடி வணங்க வேண்டியவங்க எனக்கு ஊனும், உயிரும் கொடுத்த நீங்க ரெண்டு பேர்தானேப்பா..... நீங்க எனக்கு இந்தப் பிறப்பைத் தந்திருக்காட்டா, எனக்கு அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் வணங்கி, இத்தனை தூரம் முன்னேறியிருக்க முடியுமா? வாங்கப்பா..... வாங்கம்மா....."

இருவரும் நிற்க, அவர்கள் பாதங்களில் வணங்கி எழுந்தாள். ஆண்டாளு அவளை உச்சி முகர்ந்தாள். என்றுமே வாய் திறந்து பேசாத ஆண்டாளு, அன்று மகளை அணைத்து, சிறு குழந்தையாய் பாவித்து, செல்லம் கொஞ்சினாள். அடுத்த கணமே அவளுடைய பேச்சு மாறியது.

"செல்வி! இன்னும் ஒரு வருஷம்போல வேலை செஞ்சு, பணத்தை சேர்த்து வச்சுக்கம்மா. உங்கப்பாவும், நானும் சம்பாதிக்கிறது எங்களுக்குப் போதும் கண்ணம்மா. ஒரு நல்ல படிச்ச பையனாப் பார்த்து உனக்கும் கல்யாணம், காட்சின்னு செய்ய வேணாமா? இத்தனை நாளு நீ அனுப்பிச்ச பணத்தையெல்லாம் அப்பா மாலும்மா அப்பாகிட்ட கொடுத்து பேங்குல போட்டிருக்காரு. அதனால உனக்குக் கல்யாணம் செய்துட்டா எங்க பொறுப்பும் குறையுமே. ஏன் செல்வி, நான் சொல்றது சரிதானே? உறவுமுறையில பார்க்கட்டா..... இல்லே....."

"அம்மா! என்னம்மா பேசறே நீ. எனக்கு ஒண்ணுமே புரியலையே. எப்போதாவது நான், 'எனக்கு கல்யாணம் பண்ணி வையுங்க'ன்னு கேட்டேனா? இல்லேல்ல. அது உங்க கடமைன்னு ரெண்டு பேருமே சொல்லுவீங்க. அது சரிதான். ஆனா..... அம்மா..... எனக்கு ஏனோ..... இந்தக் கல்யாணம், குழந்தை, குடும்பம்னு இதிலெல்லாம் மனசு போகலேம்மா. காரணம் தெரியலே. பொன்னி நல்லா படிக்கிறா. அவளுடைய ஆசை சார்டர்ட் அக்கவுண்டெண்ட் ஆகணும்னு ஸி.ஏ. படிக்கணும்கறா. நானும் சரின்னு சொல்லியிருக்கேன். ப்ளஸ் டூவுல

காமர்ஸ்தாம்மா எடுத்திருக்கா. மாலுக்காவோட அப்பாகூட, 'ரொம்ப நல்லா படிக்கிறா. அவ ஸி.ஏ.தான் படிக்கணும்'னாரு. அவ படிக்கட்டும். கணேசு டாக்டருக்குப் படிக்கணும்னு ஆசைப்படறாம்மா. ஏம்மா, உன் குழந்தைங்க மூணு பேருல ஒருத்தி இன்ஜினீயர், இன்னொருத்தி ஸி.ஏ., பையன் டாக்டர்னு சொல்லிக்கப் பிடிக்கலையாம்மா....."

"செல்வி..... நீ சொல்றது ரொம்ப சரி. ஆனா, எங்க கடமைன்னு....."

இடைமறித்தாள் செல்வி.

"அம்மா, தயவுசெய்து என்னை விட்டுடுங்க. காலேஜுலேயும் சரி, வேலையிலேயும் சரி, நான் நிறைய்ய ஆம்பிளைப் பசங்களோடத்தான் படிச்சேன்; எல்லாரும் சகஜமாத்தான் பேசினோம், சிரிச்சோம், கிண்டலடிச்சோம். ஆனாலும், யாருக்குமே கல்யாணம் பண்ணிக்கனும்னு என்னைக் கேட்கவுமில்லே; நானும் கல்யாணம் பண்ணிக்கலாமா என்கிற எண்ணத்துல பழகவுமில்லே; எவரையும் விரும்பவுமில்லே. அம்மா! அப்பா! ரெண்டு பேருக்குமே சொல்றேன். தயவுசெய்து என்னை விட்டுடுங்க. என்னுடைய மனசுல அந்த எண்ணம் துளிக்கூடயில்லேம்மா. எனக்கு அன்னை, ஸ்ரீ அரவிந்தர் மட்டும் போதும்மா. அம்மா, அம்மா, எனக்குப் பிடிக்கலேம்மா..... ப்ளீஸ்மா....."

கண்ணீர் மல்க தாயையும், தந்தையையும் பிடித்தபடி கெஞ்சும் செல்வியை அணைத்துக்கொண்டனர். ஆனால் மனமோ, 'அன்னையே, எங்களுக்கு எதுவும் புரியவில்லை. உங்கள் கையில் ஒப்படைத்துவிட்டோம். இனிமேல் அவளுக்கு நீங்கள்தான் எல்லாவிதத்திலும், இத்தனை நாளிருந்ததைப்போல் வழிகாட்டுங்கள். எல்லாம் உங்களுக்கே சமர்ப்பணம்" என்று அன்னையிடம் கூறியபின் கொஞ்சம் தெளிந்தார்கள்.

➙➙➙➙➙➙

செல்வியிடம் பொன்னியும், கணேசும் ரொம்பவும் பிரியமாக இருந்தார்கள்.

''அக்கா! நாம மூணு பேரும் எப்பவும் இப்படியே ஒத்துமையா, சந்தோஷமா இருக்கணும்க்கா. அக்கா! அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் வந்த பிற்பாடுதானே நாம எல்லாருமே என்னமா மாறி, புதுசா பொறந்தவங்க மாதிரியிருக்கோம். செல்விக்கா, எனக்கு படிப்புல வர சந்தேகங்களை மாலும்மா அப்பாவே சொல்லித் தராரு; தெளிவாப் புரியுதுக்கா. அக்கா, நானும் கணேசும் நல்லா படிக்கறோம். கணேசும்



பொறுப்பா படிக்கிறாங்க்கா. அதுவுமில்லாம, அவங்க ஸ்கூல்ல டென்னிஸ் நல்லா விளையாடறதால, பி.டி. மாஸ்டர் அவனுக்குத் தனியா கோச் செய்யிறார். இப்ப, சின்னச் சின்ன லெவல்ல, மத்த பள்ளிக்கூடங்களோட விளையாடி, இவங்க ஸ்கூல் ஜெயிக்குதுக்கா".

''பொன்னி! உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? அன்னைகூட டென்னிஸ் விளையாடுவாங்களாம். தேகப்பயிற்சிக்கு அவங்க ரொம்ப முக்கியத்துவம் குடுப்பாங்களாம். அங்கேயிருக்கிறவங்களுக்கு தேகப்பயிற்சியும், சாத்வீகமான உணவும்தான் முக்கியம்னு சொல்லுவாங்களாம்''.

''ஓ! அதுதான் நம்ம வீட்டுலகூட இப்ப எந்த 'கவிச்சி'யும் செய்யிறதில்லை, இல்லையாக்கா....."

"ஏன் பொன்னி, உனக்கு வேணும்போல தோணுதா....."

"இல்லேக்கா..... இப்பல்லாம் அதப்பத்தின நெனைப்பேயில்லேக்கா. அதுவும் கணேசுகூட எப்டி மறந்தான்னே தெரியலே. ஆனா, என் மனசுல ஒரு ஆசை இருக்குக்கா".

"என்ன பொன்னி..... சொல்லு....."

"அக்கா! இப்ப நம்ம வீடு சுத்தமாயிருக்கு. நம்ம அப்பாவும் ரொம்ப நல்லவரா ஆயிட்டாரு. இதெல்லாம் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் வந்தபின்னால....., எத்தனை, எத்தனை சந்தோஷமான மாற்றங்கள்..... அக்கா, நீ நல்லா சம்பாதிக்கரே. அன்னையோட அருளாலே நம்ம குடும்பம் இன்னும் நல்லா ஆகும்னு நம்பிக்கை இருக்கு. எது, எப்படியானாலும் நாம் இந்த வீட்டை மட்டும் விக்கவே கூடாதுக்கா. நமக்கு இந்த வீடு ஒரு கூடப்பொறந்த பொறப்புப்போலக்கா. அதுவும் மொதல்ல நம்ம வீடு எப்டியிருந்துது, இப்ப எப்டியிருக்குங்கற வித்தியாசம் என்னமா..... தெரியுது. அப்பவும் ஏதோ சுத்தம் செஞ்சுட்டுதானிருந்தோம். ஆனா..... இப்ப மட்டும் என்னமாயிருக்குது! அதுக்குக் காரணம்....."

"சொல்லு பொன்னி, என்ன காரணம்னு நினைக்கரே. தயங்காம சொல்லும்மா..... ம்....." ஆர்வத்தோடு கேட்டாள் செல்வி.

''மனசுக்கா. நம்ப மனசு. ஆமாங்க்கா. அப்ப நாம யாருமே சந்தோஷமாயில்லே. அப்பவும் குளிச்சோம், சாப்பிட்டோம், துணி துவைச்சோம், பாத்திரம் தேய்ச்சோம், வீடு பெருக்கிக் கூட்டினோம், மெழுகினோம், எல்லாமேதான் செஞ்சோம். ஆனா, இப்ப இருக்கிறாப்பல

மனசு சந்தோஷப்படல. நாம எல்லாருமே ஏனோதானோன்னு ஒரு சிரத்தையில்லாமதான் செஞ்சோம். கடமையைக்கூட மடமையாத்தான் செஞ்சோம். ஆனா இப்ப..... அக்கா..... அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் நம்ப வீட்டுக்கு வந்தபின்னாலதானே நம்ம வீட்டுக்கும் ‘உயிர்’ வந்திருக்குக்கா. ஆமாங்க்கா. நம்ம வீடு எப்டி ஜீவனோட இருக்குங்கறது நல்லாவே தெரியுது, புரியுது. நம்ம வீடு மொதல்ல இருந்ததுபோலத்தான் இருக்கு. அதே அளவுல, அதே செங்கல்லும், சிமெண்டுமாத்தான் இருக்கு. ஆனா, அப்ப இல்லாத ஒண்ணு, இந்த வீடும், இப்ப நம்மளைப்போல உயிரோடு இருக்குக்கா. ஆமாங்க்கா. இல்லேன்னா இப்டி ஒரு பளிச்சுன்னு இருக்குமா? எப்பவாவது ஒரு சின்ன ஒட்டடை ஒட்டியிருந்தாக்கூட நான் பதைச்சுப் போயிடுவேன். நம்ம மூஞ்சியில கருப்பா ஏதாவது இருந்தா முகம் கழுவறோம், பவுடர் ஒத்திக்கிறோமே. நமக்கு பாதுகாப்பாயிருக்கிற இந்த வீடு, குளிரு, மழை, வெய்யில்னு எல்லாத்துலேருந்தும் காப்பாத்தற நம்ப வீட்டை இப்டி விடலாமா? தப்பில்லையான்னு தோணும். உடனே அதை சுத்தம் செஞ்சாத்தான் மனசுக்கு ஆறுதலாயிருக்கும். அன்னையைப் பார்த்தேன்னு வச்சுக்க, அன்னை அப்டி வாய் கொள்ளாச் சிரிப்போடு ‘வெரிகுட்’னு சொல்றாப்பல தோணும். அக்கா, நமக்கு எத்தனை பணங்காசு வந்தாலும் இந்த வீட்டை நாம் விட்டுட்டோ, வித்துட்டோ போகக் கூடாதுக்கா..... சரியாக்கா.....’’

சரீரம் முழுவதும் சிலிர்க்க, பிரமிப்போடு தன் சகோதரியையே கண் கொட்டாமல் பார்த்த செல்வி, அவளை ஆரத்தழுவினாள். இருவரின் கண்களும் பனித்தன.

➙➙➙➙➙➙

செல்வி எம்.எஸ்.ஸும் பாஸ் செய்துவிட்டாள். அதுவும், அவளுடன் படித்தவர்களில் இவளே முதன்மையாக வந்தாள்.

ஊரிலிருந்து வந்திருந்த மாலதிக்கு, செல்வி வீட்டைப் பற்றியும், அவர்களுடைய படிப்பைப் பற்றியும் கேட்டு சந்தோஷம் என்றால்..... அப்படி ஒரு சந்தோஷம்.

முருகேசுவைப் பார்த்து பிரமித்துப்போனாள்.

எவ்வளவு பவ்யமாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்கிறான் என்றும், ஆளே எப்படி கம்பீரமாகத் தோற்றத்தில் மாறியிருக்கிறான்



என்று வியந்தாள். அன்னையின் கடாட்சம் அவர்களிடம் எவ்வளவு பூரணமாக ஊடுருவியிருக்கிறது என்பதும் புரிந்தது.

ஆண்டாள், ‘செல்விக்கு கல்யாணத்தில் ஈடுபாடு இல்லை’ எனக் கூறியதில், முதலில் வருத்தப்பட்டாலும், ‘அன்னை, செல்விக்கு என, என்ன வழியைக் காட்டுகிறாரோ அதிலேயே தங்களுக்குத் திருப்தி’ எனக் கூறியதைக் கேட்டு மாலதி அயர்ந்துபோனாள்.

படித்தவர்கள், படிக்காதவர்கள் என்கிற எந்தவித பேதமுமின்றி அன்னை அவர்களின் அன்புக்கும், பக்திக்கும் எவ்வளவு தூரம் வசப்பட்டிருக்கிறார் என்பது புரிந்தது.

➙➙➙➙➙➙

திடீரென ஒரு நாள் செல்வி ஊரிலிருந்து வந்தாள். வந்தவள் ஒரு கவரை எடுத்து அன்னையிடம் வைத்துப் பிரார்த்தித்தாள். பிறகு அப்பா, அம்மாவிடம் தந்து வணங்கினாள்.

‘‘அப்பா! என்னை பிராஜெக்ட் வொர்க்கிற்கு அமெரிக்கா ஆறு மாசம் அனுப்பப் போறாங்கம்மா. அது முடிஞ்சவுடன் மறுபடியும் பூனாவுக்கு வந்துடுவேன். அப்பா, எனக்கு இப்ப இந்தியாவுல, பூனாவுல நான் வேலை செய்யிற கம்பெனியிலேருந்தும் சம்பளம் தருவாங்க. அமெரிக்க கம்பெனியில வேலை செய்யிறதுக்கு அங்கேயும் சம்பளம் தருவாங்கப்பா. எனக்கு, அமெரிக்கா போற வர செலவு, தங்கற செலவு, எல்லாமே கம்பெனியோடதாம்மா. இதுல நான் நல்ல பெயர் எடுத்தா, இன்னும் இதுபோல வரும்மா. ஆனா..... அன்னையோட அருள் எனக்குத் துணையா வரும் என்கிற நம்பிக்கை பூரணமாயிருக்கிறதால..... சரின்னு சொல்லிட்டேன்..... தப்பில்லையேம்மா..... என்னப்பா சொல்றீங்க.....’’

‘‘செல்வி..... செல்வி..... எங்கண்ணே.....’’ மேலே பேச்சு வராமல் திக்குமுக்காடினான் முருகேசு. சந்தோஷத்தில் கண்களிலிருந்து பொழிந்தது ஆனந்த பாஷ்பம்.

‘‘செல்வி, நீ ஏரோப்ளேன்லதான் போரேன்னு தெரியும். ஏரோப்ளேன் வந்தா, சின்னபிள்ளையில ஓடிப்போய் வாசல்ல நின்று அண்ணாந்து பார்ப்பே. இப்ப..... இப்ப..... நீயே அந்த ப்ளேன்ல ஏறி போகப்போரேன்னு நினைச்சா..... அம்மாடி..... இது நிஜமா..... கனவான்னு புரியலேம்மா. எம் பொண்ணு அமெரிக்கா போறான்னு பெருமையா சொல்றதுக்குக்கூட வாய் வரமாட்டேங்குது. நீ அன்னையோட பொண்ணு கண்ணு. ஆமா.....

அன்னையோட குழந்தைதான். அதனாலதான் ஒவ்வொண்ணா, மணிச்சரம்போல கோத்துகிட்டே வருது சந்தர்ப்பமெல்லாம். சந்தோஷம்மா செல்வி. எனக்கு மனசும், வயிறும் ரொம்பியே போச்சு கண்ணு. சரி சரி, வா. மொதல்ல அன்னைக்கு முன்னாடி உக்காந்து தியானம் செய்வோம். வாம்மா, பொன்னி, கணேசு வாங்க.....''

முருகேசுவின் குரலிலேயே அவனுடைய குதூகலம் புரிந்தது. ஊதுவத்தி ஏற்றி அமர்ந்தார்கள். அவ்வளவே..... வெளியிலிருந்துகூட ஒரு சிறு சப்தம்கூட கேட்காமல் அப்படி ஒரு அமைதி. அந்தக் குடும்பம் முழுவதும் தியானத்தை ஆரம்பித்ததிலிருந்து சுற்றுப்புறச் சூழலும் அவர்களோடு போட்டிப்போட்டுக்கொண்டு அமைதியை வாரி வழங்கியது.

அன்னை, ஸ்ரீ அரவிந்தர் இருவருமே அந்தக் குடும்பத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். இருவர் முகத்திலுமே புன்னகை ததும்பியது.

அன்னையின் பாதுகாப்பு வளையம் அந்தக் குடும்பத்தைச் சுற்றிப் பரவியிருந்து, ஒரு பாசமான அணைப்பாகவிருந்தது.

தியானத்தை முடித்து, வணங்கி, அவர்கள் எழுந்தபோது, எங்கேயிருந்து வானம் கருமேகங்களைத் திரட்டியது! எப்படி மழையை தாரைதாரையா, சரம்சரமாக ஒன்றுபோல் பொழிந்து கொண்டிருந்தது!

ஐவரும் தியானம் கலைந்து கண் திறக்க, சத்தமின்றி வெள்ளிக்கம்பிகளாய் பொழியும் மழையைப் பார்த்து பரவசமானார்கள். மழை 'அன்னையின் அருள்' என்பது அறிந்திருந்ததால், எல்லோருமே மனம் துள்ள, அந்த மழைத்தாரையை ரசித்தார்கள்.

வருடங்கள் வேகமாக உருண்டோடின.

➜➜➜➜➜➜

தோட்டத்துச் செடிகளிலிருந்து பூப்பறித்துக் கொண்டிருந்தான் முருகேசு.

ஆண்டாளு உள்ளே வேலையாகயிருந்தாள்.

வாசற்கதவு தட்டும் சத்தம் கேட்டு, கேஸ் அடுப்பை அணைத்துவிட்டு ஆண்டாளு வாசற்கதவைத் திறந்தவளின் முகம் சந்தோஷத்தில் மலர்ந்தது.

“வாம்மா பொன்னி, மாப்பிள்ளை வரலையாம்மா. டேய் வாடா என் பேரக்குட்டி..... வாடா..... பாட்டிய மறந்துட்டியா கண்ணு..... வாடா.....''



பொன்னியிடமிருந்து குழந்தையை வாங்கி முத்தமிட்டாள். ''யாரு வந்திருக்கான்னு பாருங்க..... வாங்க.....''

முருகேசு கூடை நிறைய்ய பறித்த பூக்களுடன் உள்ளே வந்தவன், பேரன் அரவிந்தனை வாரி அணைத்தான்.

பொன்னி ஸி.ஏ. முடித்து, ஒருவரிடம் மேற்கொண்டு வேலையையும் கற்று, இப்போது தனியாகவே ஆபீஸ் வைத்து, தன் கணவனுடன் வேலை செய்கிறாள். கணவன் தனபாலும் ஸி.ஏ. என்பதால் சுலபமானது. அன்னையைத் தன் மனைவி மூலம் மட்டுமின்றி, முதலிலேயே தெரிந்து கொண்டிருந்த தனபாலும் அன்னை, ஸ்ரீ அரவிந்தரையே தான் வணங்கும் தெய்வமாகவே ஏற்றுக்கொண்டதால், எந்தவிதமான குழப்பமுமின்றி குடும்பம் அழகாக நடந்தது. அதுவும் பொன்னி, சிறு வயதிலிருந்தே அதிகம் ஆசைப்பட்டவள் அல்லள். செல்வியைப் போலத்தான் அவளும் எல்லோரிடமும் இதமாக நடந்தாள். படித்தாள். கூடப் படித்த தனபாலுடன் பிரியம் ஏற்பட, ஆனால் அதை, தங்கள் படிப்பு முடிந்து, நிரந்தரமான வருமானம் வந்தபிறகே பெரியவர்களிடம் கூறி, ஒப்புதலுடன் திருமணம் என்பதில் உறுதியாய் இருந்தனர்.

தனபால் அனாதை ஆஸ்ரமத்தில் வளர்ந்தவன். அவனுடைய ஆர்வமான படிப்பு, நன்னடத்தை, இவைகளையெல்லாம் பார்த்த அந்த அனாதை ஆஸ்ரமத்தின் பொறுப்பை ஏற்றிருந்த பாதிரியார், ஒரு செல்வரின் உபயத்தில் அவனைப் படிக்க வைத்தார். அவனும் நன்கு படித்து முதல் மாணவனாக வந்ததில் பாதிரியாருக்கும், செல்வருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி.

இதில் அந்த செல்வர் அன்னையின் பக்தர். அன்னையின் கோட்பாடுகளைத் தன்னால் இயன்ற அளவு செயலில் காட்டுபவர். அவர் மூலம் தனபாலும் அன்னை, ஸ்ரீ அரவிந்தர் பற்றிய விஷயங்களை அறிய முடிந்தது. ஆனால் அவன் தெரிந்து கொண்ட அளவிற்கு ஈடுபாட்டோடு இல்லாமல் எப்போதும் போலவே இருந்தான். ஆனால் குணத்தில் தங்கம்.

அன்னையின் சூட்சுமம் நமக்குத் தெரியுமா? இல்லை புரியுமா? அனாதை இல்லத்தில் வளர்ந்தவன். பெற்றவர்களைப் பற்றி சின்ன விவரம்கூடத் தெரியாது. கிறிஸ்துவப் பாதிரியாரால், அவனின் நல்ல நற்பண்புகளுக்காகப் பெற்றது நல்ல கல்வி. மேற்கொண்டும் அவன்

படிக்க ஆதரவு தந்தவர் அன்னையின் பக்தர். அன்னையைப் பற்றி அறிந்தவனை, அன்னையே தங்கள் தெய்வம் என்றிருக்கும் குடும்பத்தில் இணைத்ததும் அதே அன்னைதானே. இதனால் பொன்னிக்கும் எத்தனை மகிழ்ச்சி, சந்தோஷம். கணவரும் அன்னை, ஸ்ரீ அரவிந்தரை ஏற்றுக் கொண்டு, இருவரும் வணங்குவதும், பூக்களை அடுக்குவதும், தியானிப்பதும்..... எத்தனை சுகமான, ஆனந்தமயமான வாழ்க்கையை அன்னை தந்திருக்கிறார்.

செல்வி தேர்ந்தெடுத்தது, தனக்கு அன்னை, ஸ்ரீ அரவிந்தர் மட்டுமே போதும். இல்வாழ்க்கையில் நாட்டமில்லை என நினைத்தாள்.

ஏற்றுக்கொண்டார் அன்னை.

காரணம், அவளின் தூய்மையான பக்தி. அவளின் இதயம்கூட 'அன்னை, அன்னை' என்றுதான் துடிக்குமோ என்கிற அளவிற்கு அவளின் மனம் எப்போதும் அன்னையைத்தான் சுமந்தது.

பொன்னிக்கும் அதே அன்னைதான் வணங்கும் தெய்வம். ஆனாலும், அவள் மனம் படிப்போடு, மணவாழ்க்கையிலும் நாட்டம் கொண்டது. அதில் தவறேது? அன்னையோடு, இயல்பான இல்வாழ்க்கைக்கும் விருப்பப்பட்டதால், அன்னையின் கருணையும் அவளுக்கு நல்ல கணவனையே தந்தது.

உண்மையான பக்தியும், நேர்மையான பிரார்த்தனையும் அன்னைக்கு மிகவும் உகந்ததாகும். அன்னையின் மந்திரங்களுள் ஒன்று:

"நேர்மையான நம்பிக்கையில்தான்
நம் வெற்றியின் நிச்சயம் உள்ளது.
என் ஆசிகள்".

அந்த நேர்மையான நம்பிக்கைதான் செல்வியின் வீட்டில் அனைவரிடமும் இருந்தது.

பொன்னி, தங்கள் விருப்பத்தை முதலில் கூறியது அன்னையிடம்தான். ஆம்! அவள் தெய்வமாய் வணங்கும் அன்னையிடம். அடுத்து அவள் கூறியது, தன்னைப் பெற்ற அன்னையிடம்.

''பொன்னி! நீ கல்யாணம் செய்துக்கரேன்னு சொல்றது சந்தோஷந்தான். அன்னையிடமே சொல்லும்மா. அவங்க நல்ல பதிலைத் தந்தா கல்யாணம் முடிக்கலாம், சரியா பொன்னி....."

பாமரத்தனமான ஆண்டாளுவின் பரமார்த்தியான பக்தி, நம்பிக்கை,



சரணாகதி, இதற்கு ஈடு வேறேது. அதுதான் அன்னை அவர்கள் வீட்டில் நிரந்தரமாகவே குடியேறிவிட்டார்.

➙➙➙➙➙➙

கணேசு டென்னிஸிலும் சரி, டாக்டர் படிப்பிலும் சரி, மிக நன்றாக பரிமளித்தான்.

மூன்று குழந்தைகளுமே மூன்று முத்துக்களாய் மாறியது. மாற்றியது எப்படி? யாரால்? மூன்றுமே சோடை போகாமல், ஒருவருக்கொருவர் அன்பாக நடந்து, பண்பாக பரிமளித்து, பூக்களின் தொகுப்புபோல் இருந்து வருவது எதனால்?

அன்னை, அன்னை, அன்னையேதான்.

அன்னையை வணங்குவதில் முதலில் இருக்கும் தீவிரம் படிப்படியாகக் குறைந்து, நம் வாய் மட்டுமே சரணம் கூறுகிறது. உள்ளார்ந்து வரும் சரணம், அன்னையை நினைத்து ஒரு முறை கூறினாலும், அதற்குண்டான பலன் சொல்லில் அடங்காது; அனுபவித்து உணர வேண்டியதாகும்.

அந்தச் சின்னஞ்சிறிய வீடு, இப்போது மாடி வீடாகியது எப்படி? பின்புறம் வெற்றிடமாக புல்லும், பூண்டும் விளைந்து, புதர் மண்டியிருந்த இடம் இப்போது, சின்னஞ்சிறு, அழகிய பூந்தோட்டமாய், நந்தவனம் போல் மாறியது எப்படி? அந்த இடம், எல்லோரும் அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் வணங்க, தியானிக்க எனத் தங்களாகவே வந்து செல்வது எப்படி?

அதுதான் அன்னையின் கடாட்சம்.

ஆண்டாளு, முருகேசுவின் குடும்பம் எல்லோருடைய பார்வையிலும் முதலில் எப்படியிருந்தது?

அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அவர்கள் குடிலுக்குள் வந்து அமர்ந்தவுடனே வந்த மாற்றங்கள் கொஞ்சம் கொஞ்சமாக விஸ்வரூபமாய் மாறியதைக் கண்கூடாகப் பார்க்கிறோமே.

இது நிஜம், இது உண்மை, இது சத்தியம்.

இவைகளை நாம் மனம் திறந்து அறிந்தால், நம் வீட்டிலும் குடியேறுவார் அன்னை. நமக்கு வேண்டியதைத் தருவார். நம் பக்திக்கேற்ப, அவருடைய அருள் நம் வீட்டை நிறைவாக்கும்.

➙➙➙➙➙➙

ஜப்பானுக்கு வேலைக்காக பத்து மாத காண்ட்ராக்டில் போயிருந்த

செல்வி அன்று திரும்பி வருகிறாள்.

கணேசும், முருகேசும் ஏர்போர்ட்டிற்குப் போயிருந்தார்கள்.

முருகேசு தன் கண்களுக்கு மேல் கையையே குடையாக்கி, தன் பெண் வருவதைப் பார்க்க, வரும் பயணிகளின் கூட்டத்தில் கூசும் கண்களை அலைய விட்டான்.

"அப்பா! அதோ பாருங்கப்பா..... செல்விக்கா வாராங்க பாருங்கப்பா..... நம்மைப் பார்த்துக் கையாட்டறாங்க....."

அதோ செல்வி, அவன் கண்களுக்கு பட்டத்து இளவரசி போல், கைகளை அசைத்தபடி அழகாக வந்து கொண்டிருந்தாள் அவர்களை நோக்கி.

''அக்கா! சூட்கேஸைக் குடுக்கா. நான் தூக்கிட்டு வரேன். குடுக்கா....."

"கண்ணு..... நல்லாயிருக்கியாம்மா..... வாம்மா, ஆண்டாளு வாசற் படிக்கட்டுலேயே உக்காந்திருப்பாம்மா..... அங்கே போன வேலையை நல்லா முடிச்சுட்டியாம்மா..... வாம்மா..... ஏதாவது சாப்டியா கண்ணு. காபி குடிக்கிறியாம்மா....."

ஒரு தகப்பனின் உள்ளார்ந்த பாசமும், அன்பும் போட்டி போட்டுக்கொண்டு வெளிப்பட்டதைப் பார்த்து, ஒரு வினாடிக்கும் குறைவாகக் கண்களை மூடி, அன்னையை நினைத்து, நன்றியும் கூறி, பின் தந்தையைப் பார்த்து சிரித்தாள் செல்வி.

''அக்கா! உனக்கு ஒரு ஸர்ப்ரைஸ்க்கா. வாயேன். சீக்கிரமா நடக்கா....." நமட்டுச் சிரிப்புடன் கூறினான் கணேசு.

கணேசு, இன்றும் அதே சிறுவனாகத்தான் தோன்றினான் செல்விக்கு.

கணேசு வேகமாகப் பெட்டியுடன் நடக்க, தந்தையோடு, அவர் கையைப் பிடித்துப் பேசியபடி நடந்தாள் மெதுவாக.

சுற்றுமுற்றும் பார்த்தாள் வெளியே வந்தவுடன்.

ஏர்போர்ட்டிற்கு வெளியே நிறைய வாகனங்கள் வந்து நிற்பதும், ஜனங்கள் ஏறுவதுமாக மாறி மாறி நடக்க, திடீரென 'சர்ர்ரென' ஒரு கார் அவர்களருகில் வந்து நின்றது. திடுக்கிட்டு ஒரு அடி முருகேசுவையும் பின்னுக்கு இழுத்தாள் செல்வி.

"அக்கா! செல்விக்கா....." காரின் கதவைத் திறந்து, சின்னப்பிள்ளை போல் குதித்து இறங்கிய கணேசைப் பார்த்து ஆச்சரியத்தோடு 'வாவ்'



என்றாள் செல்வி. அவன் கையைப் பிடித்து 'கங்கிராட்ஸ்' என குலுக்கினாள்.

காரின் முன்புறக் கண்ணாடியில் அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் ஸிம்பல் ஒட்டப்பட்டிருந்தது. காரினுள் அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் படம் அழகுற இருந்தது.

"அக்கா..... நல்லாருக்காக்கா. என் மனசுல ஆசை இருந்துது. அதை அன்னைக்கிட்டவே சொல்லிட்டேங்க்கா. பத்தே நாலுல கார் கிடைச்சு போச்சுக்கா. இப்ப நினைச்சாலும் உடம்பு சிலிர்க்குதுக்கா. நல்லாயிருக்காக்கா''.

சிறுகுழந்தையாய் மாறி, தன் சகோதரியின் முகத்தையே ஆவலுடன் பார்க்கும் தன் சகோதரனை பாசத்துடன் தழுவியவளின் கண்களில் ஆனந்தம் பாஷ்பமாய் நிறைந்தது. அன்னை அவள் மனதுள் வந்து 'செல்வி சந்தோஷமா' எனக் கேட்பது போலிருந்தது.

*முற்றும்.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பண்பு:

நாம் ஏற்றுக் கொண்ட பண்புகளே நம் உலகம்; நமக்கு அதுவே பிரபஞ்சம். அன்னையும் பண்புகளாகவே நம்மிடம் வருகிறார். அன்னையின் பண்புகளை முழுவதும் ஏற்றுக் கொண்டால், அன்னை முழுமையாக நம்மிடம் வருவார்.

பார்க்கப் போனால், எதையும் நாம் பண்பு மூலமாகவே அடைகிறோம்.

***மனிதன் உருவாவது, பண்பின் உருவகத்தால்.***

## எவ்வாறு பிரிம்ரோஸ் பள்ளி மற்ற பள்ளிகளைக் காட்டிலும் வித்தியாசமாக விளங்குகின்றது?

ஜரீனா பீகம்

பிரிம்ரோஸ் பள்ளியின் மிக முக்கியமான அடிப்படைக் குறிக்கோள் என்னவென்றால், பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு குழந்தையையும் ஈடு, இணையற்ற, மிகத் தனித்தன்மை வாய்ந்தவர்களாக உருவாக்குவது. எங்கள் பள்ளி குழந்தைகளுக்கு நாங்கள் சுதந்திரம் அளிப்பதனால் ஒவ்வொரு குழந்தையும் தனித்து விளங்குகின்றது. இதனால் ஒவ்வொரு குழந்தையும் தன்னம்பிக்கையுடன் செயல்படுகின்றது. இந்தத் தன்னம்பிக்கையை நாங்கள் அந்தக் குழந்தையின் தரத்தின் அடிப்படையிலோ, பரீட்சை எழுதி அதன் மூலமாகவோ, வினாடி-வினா நிகழ்ச்சி மூலமாகவோ வளர்ப்பதில்லை. மாணவர்களிடம் அந்தத் தன்னம்பிக்கையைக் கொண்டு வருவதற்காக எங்கள் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களைக் கடிந்து கூறுவதோ (திட்டுவது), அச்சுறுத்துவதோ, மிரட்டுவதோ, அதிகாரம் செலுத்துவதோ, ஆதிக்கம் செலுத்துவதோ கிடையாது.

நாங்கள் எதற்காக, எந்த நோக்கத்திற்காக இப்பள்ளி ஆரம்பிக்கப் பட்டது என்பதை எங்கள் பள்ளி ஆசிரியர்களுக்கு விளக்கிக் கூறுவோம். எங்கள் ஆசிரியர்களும் மேற்கூறப்பட்ட அனைத்தையும் மிக சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு அவ்வாறே மாணவர்களிடம் செயல்பட்டு, வெற்றி கண்டுள்ளனர்.

பழைய முறைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், குழந்தைகளிடம் உள்ள தனித்தன்மை காணப்படுவதில்லை. உதாரணமாக, ஒரே வகுப்பில் சில



மாணவர்கள் பாடங்களை நன்கு கவனித்து, உடனே ஆசிரியர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிப்பர். ஒரு சில மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூறுவதைக் கிரகிக்க நீண்ட நேரம் தேவைப்படும். அப்போது நன்கு படிக்கும் மாணவர்கள் மற்ற மாணவர்களைக் காட்டிலும் மிக விரைவில் படிப்பை முடித்துவிட்டு என்ன செய்வது என்று தெரியாமல் மற்றவர்களைத் தொல்லைப்படுத்துவார்கள். அதனால் ஆசிரியர்கள் பாடத்தை எல்லோருக்கும் புரியும் விதத்தில் பொறுமையாகவும், உற்சாகத்துடனும், ஆழமாகவும் நடத்தினால் அனைவரும் நன்றாகப் புரிந்து கொள்வர்.

பொதுவாக ஆரம்ப நிலை வகுப்புகளான பிரி.கே.ஜி., எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி. வகுப்புகளில், அதாவது 2½, 3 வயதுடைய குழந்தைகளை 3 அல்லது 4 மணி நேரம் ஒரே இடத்தில் அவர்களை உட்கார வைத்து கையெழுத்து எழுத வைப்பது மட்டுமே கற்றுக் கொடுக்கின்றனர். அந்த சின்னஞ்சிறு குழந்தைகள் எப்படி ஓரிடத்தில் உட்கார்ந்து எழுத முடியும்? அப்படி எழுதாவிட்டால் அக்குழந்தைகள் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப் படுகின்றனர்.

ஆனால் எங்கள் பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு அந்த 3 மணி நேரத்தில் விளையாட்டு மூலமாகவும், கதைகளை பப்பட் ஷோ (puppet show) மூலமாகவும், படிப்பதை ஃபிளாஷ் கார்டு (flash card) மூலமாகவும், பாட்டு, நடனம், உடற்பயிற்சி, அறிவுத் திறனை எளிமையாகக் கற்கும் விளையாட்டு, நிறைய அறிவை வளர்க்கும் செய்திகளும் (G.K.) கற்றுக் கொடுக்கப்படுகின்றது. அதனால்தான் எங்கள் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் கூட பள்ளிக்கு வர ஆசைப்படுகின்றனர்.

நாங்கள் எவ்வாறு குழந்தைகளுக்கு மிக எளிய முறையில், அவர்களுக்குப் புரியும் விதத்தில் பாடம் நடத்துவது, மிக விரைவில் அவர்கள் எப்படி நிறைய கற்றுக் கொள்வது என்பதை எங்கள் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்றோம். ஆசிரியர்கள் இந்த

அடிப்படை மனப்பான்மையைக் கற்றுக் கொண்டால், மாணவர்களும் மிக விரைவில் அவர்களிடமிருந்து படிப்பதை உற்சாகத்துடனும், மகிழ்ச்சி-யுடனும் எளிதில் கற்றுக் கொள்வார்கள்.

அது மட்டுமல்லாமல், எங்கள் பள்ளியில் பிரி.கே.ஜி., எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி. வகுப்புகளில் ஆசிரியர், மாணவர்களின் எண்ணிக்கை விகிதம் 1 : 10 ஆக உள்ளது. ஒரு ஆசிரியரிடம் 4 அல்லது 5 மாணவ, மாணவியர்கள் மட்டுமே படிக்கச் செல்வர். அதனால் ஒவ்வொரு குழந்தைக்கும் தனிக் கவனம் செலுத்த முடிகின்றது. அவ்வாறு 2 ஆசிரியர்களிடம் மாணவர்கள் படிக்கச் செல்வர். மற்ற மாணவர்கள் 3வது ஆசிரியரிடம் அறிவுத் திறன் போன்ற விளையாட்டுக்கள், ஓவியம் வரைதல் மற்றும் இதரப் பயிற்சிகளை கற்றுக் கொள்வார்கள். 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளில் 1 : 15 என்ற விகிதத்தில் உள்ளது.

ஆசிரியர்கள் குழந்தைகளின் வெளித் தோற்றத்தை வைத்தோ, அவர்கள் படிப்பதை வைத்தோ கணித்துவிட முடியாது. அதற்கு உதாரணமாக எங்கள் பள்ளியில் சித்தார்த் என்ற மாணவன் 2½ வயதில் வந்து சேர்ந்தான். அவன் யாரிடமும் பேசவோ, விளையாடவோ மாட்டான். குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்றாலும் சைகையில் மட்டுமே காண்பிப்பான். எப்படி, எந்த வகையிலும், என்ன கேள்வி கேட்டாலும் தலையை மட்டுமே அசைப்பானே தவிர வாய் திறந்து பேசவே மாட்டான். ஆசிரியர்கள் இந்த குழந்தையைப் பற்றி மிகவும் கவலைப்பட்டு எவ்வாறு எல்.கே.ஜி. வகுப்பிற்கு உயர்த்துவது என்று நினைத்துக் கொண்டிருந்த-னர். அவன் எல்லாவற்றையும் உற்று பார்த்துக் கொண்டே இருப்பான். Flash card காண்பித்தாலும் அமைதியாக அதைப் பார்ப்பான். வாய் திறந்து எதையும் சொல்ல மாட்டான். ஒரு நாள் பையனின் அப்பாவை பிப்ரவரி மாதத்தில் அழைத்து, "உங்கள் குழந்தை எதுவும் பேசவோ, சொல்லுவதோ, விளையாடுவதோ கிடையாது. இப்படி இருந்தால் நாங்கள் எல்.கே.ஜி. வகுப்பிற்கு அனுப்ப முடியாது. இன்னும் ஒரு வருடம் இதே வகுப்பில்



(பிரி.கே.ஜி.) படித்தால் நன்றாக இருக்கும்" என்றார் ஆசிரியர். உடனே அவன் அப்பா, ''வீட்டில் சித்தார்த் நன்கு பேசுகின்றான், விளையாடுகின்றான் மற்றும் பள்ளியில் நடக்கும் அனைத்தையும் (படித்ததை பற்றியும்) கூறுகின்றான். எங்களுக்கு மிக மகிழ்ச்சியாக உள்ளது" என்றார். இதனால் எங்களுக்குப் புரிந்தது என்னவென்றால் அந்தக் குழந்தை எதையும் பேசாமல், அமைதியாக அனைத்தையும் கிரகித்துக் கொள்கின்றான்என அறிந்தோம். பிறகு எல்.கே.ஜி. வகுப்பிற்கு அனுப்பினோம். எல்.கே.ஜி. வகுப்பிற்கு சென்றவுடன் ஒரே மாதத்தில் அனைத்திற்கும், ஆசிரியர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, உடனடியாகப் பதில் கூறினான். தற்போது பார்த்தால் மற்ற குழந்தைகளை விட அவன்தான் தலைசிறந்து விளங்குகின்றான். இதிலிருந்து ஆசிரியர்கள் கற்றுக் கொண்டது என்னவென்றால் குழந்தைகளின் வெளித் தோற்றத்தைக் கண்டு அவர்களை மதிப்பீடு செய்ய முடியாது. ஒவ்வொரு குழந்தையையும் உற்று கவனித்து கண்காணித்தால், ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் அவரவர் திறமைகளை வெளிப்படுத்துவர்.

நாங்கள் நம்புவது என்னவென்றால் எல்லா மாணவ, மாணவியர்களும் என்றாவது ஒரு நாள் கண்டிப்பாக அவரவர் திறமைகளை ஏதாவது ஒரு விதத்தில் வெளிப்படுத்துவார்கள் என்பதை நாங்கள் நம்பிக்கையுடன் உறுதியளிக்கின்றோம்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

இறைவனைக் காணும்வரை மனிதன் பல முறைகள் அவன் மீது இடறி விழுவதை மனதிலுள்ள அழைப்பு குறிக்கும்.

***அழைப்பிருந்தால் ஆண்டவன் மீது இடறி விழுவான்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**885) நேற்றிருந்த நிலையை மறந்து, இன்றுள்ள நிலையைப் பாராட்டுவது சமூகம். புதுப் பணக்காரனும், ஓய்வு பெற்ற ஆபீசரும் இதை உயர்வாகவும், தாழ்வாகவும் பெறுகிறார்கள். பிறர் மட்டுமல்லர், நாமும் நம்மை அதுபோல் நினைக்கிறோம். அதேபோல் மனிதன் தன்னை மனிதனாகக் கருதாமல், ஆன்மாவாகக் கருத வேண்டும்.**

***உள்ளதற்கே உயர்வு என்பதால் மனிதனை ஆன்மாவாக அறிவோம்.***

எதிரி நம்மை அழிக்க முயன்றவன். நம்மை நினைத்தால் அவனுக்கு நெஞ்சு கொதிக்கிறது. இன்று அவனுக்குப் பதவி வந்துவிட்டது; பெரிய மனிதனாகிவிட்டான்.

நண்பர்களும், உறவினர்களும் பெரும்பான்மையோர் பதவி வந்தவுடன் பகைமையை மறந்துவிடுவர். பகைமை நம்முடையதாக இருக்கலாம். மானம், அவமானம், நல்லது, கெட்டது மறந்துபோகும். கிட்டே போனால் அழித்துவிடுவான் எனில் போகமாட்டார்கள். அழிக்க மாட்டான், ஆனால் சேர்த்துக் கொள்ள மாட்டான் என்றாலும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. தங்களையறியாமல், அழைப்பில்லா-மல், வெட்கமில்லாமல் போய்ச் சேர முழு முயற்சியை உயிருள்ளவரை எடுப்பது பெரும்பான்மையான மனிதச் சமுதாயம். அவர்கள் மனநிலை, கூறும் சொல், செய்யும் செயல்களை உலகமறியும்.

- ✡ *பழைய விஷயத்தை இன்று கருத முடியுமா? இன்று அவன் அந்தஸ்து உயர்ந்துவிட்டது. அவன் எப்படியிருந்தாலென்ன, நாம்தான் போய்ச் சேர வேண்டும்.*
- ✡ *கல்யாணத்திற்கு அழைக்காவிட்டாலென்ன, நானே போய் பத்திரிகை கேட்டு வாங்கிக் கொள்கிறேன். போனால், 'ஏன் வந்தாய்?' எனக் கேட்டால் குறைந்துவிடுமா? அதெல்லாம் பார்த்தால் பெரிய இடமில்லை.*
- ✡ *அந்த நாளில் அறிவில்லாமல் ஏதோ நடந்துவிட்டது. இப்போது அதை நினைத்துக் கொண்டிருக்க முடியுமா?*
- ✡ *துரியோதனனை பீஷ்மரும், துரோணரும் ஏற்கவில்லையா?*

  *காங்கிரஸ் D.M.K.யுடன் சேரவில்லையா?*

  *அரசியலே ஏற்கும் பொழுது நமக்கென்ன?*
- ✡ *இப்பொழுது போனால் சேர்ந்து கொள்ள முடியுமா? முடியாதா? முடியும் என்றால் மற்றனவெல்லாம் கேள்வியில்லை.*
- ✡ *இந்தச் சட்டமெல்லாம் பேசினால் பிழைக்கத் தெரியாது என்று அர்த்தம்.*
- ✡ *எப்படியிருந்தாலும் தம்பியில்லையா? அன்று தூன்யம் வைத்தான், அதெல்லாம் நினைத்தால் காரியம் நடக்குமா? ஆமாம், ஆத்திரத்தில் நான் அறியாமல் நடந்தேன்; என்னென்னவோ பேசினேன்; தூன்யமும் வைத்தேன்; எதுவும் நடக்கவில்லை; அவன் அந்தஸ்து உயர்ந்துவிட்டதே. இனி என்ன செய்வது?*

பெரும்பான்மையோர் என்றால் 99%. மீதி 1% மனிதரும் தயங்கித் தயங்கி அவர்களைப் போலவே முடிவாக நடப்பார்கள். தேறுபவர்கள் இல்லை. தேறுபவர்கட்கு அன்னை அருளாக, அதிர்ஷ்டமாக வருவார்கள். வெறும் மனிதர் பிரார்த்தனை செய்யலாம். பிரார்த்தனை மனம் போலப் பலிக்கும். வெறும் மனிதனாக இல்லாமல் இலட்சிய மனிதனாக இருப்பது நல்லது. "நெஞ்சு பொறுக்கவில்லை, இந்த நிலை கெட்ட மாந்தரை நினைத்துவிட்டால்" என்றார் பாரதி. நாம் பாரதி கணக்கில் தேற வேண்டும்.

**அன்னை இலட்சியம் இலட்சியமான மனிதனுக்குண்டு.**

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**இயல்பான சந்தோஷம் இறைவனின் பீடம்.**

# அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்துகொள்ள வேண்டியது

N. அசோகன்

இன்று உலக நாடுகளில் எந்நாடு முதன்மையாக விளங்குகிறது என்ற கேள்வியை இந்தியர்களிடமும், உலகத்திலுள்ள மற்ற நாட்டைச் சேர்ந்தவர்களிடமும் கேட்டால், அநேகமாக எல்லோரும் அந்நாடு அமெரிக்காதான் என்று பதில் சொல்வார்கள். அப்பதில் உண்மையா என்று கேட்டால், அது உண்மைதான் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால், பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் அந்நாடுதான் தற்பொழுது முன்னணியில் உள்ளது. அந்நாட்டில் ஒரு தனி நபருடைய சராசரி ஆண்டு வருமானம் 41,400/- டாலர் (ரூ.18,63,000/-) (ரூ.1,55,250 per month) அளவில் உள்ளது. அதே சமயத்தில் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஒரு தனி நபருடைய சராசரி ஆண்டு வருமானம் 600/- டாலர் அளவில் (ரூ.27,000/- per year; ரூ.2,250/- per month) தானுள்ளது. இவ்வளவு பெரிய வித்தியாசமிருக்கும் பொழுது, உலக அரங்கில் அமெரிக்கா முன்னணி நாடாகத் திகழ்வதில் எவ்வித ஆச்சர்யமுமில்லை. 1990க்கு முன்னால் சோவியத் யூனியன் அமெரிக்காவிற்கு நிகரான இராணுவ பலம் மற்றும் அரசியல் பலம் கொண்டு விளங்கியது. ஆனால், அங்கு கம்யூனிஸ ஆட்சிபோல் ஜனநாயகம் வந்தபொழுது பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டு சராசரி ஆண்டு வருமானம் வெறும் 3000/- டாலர் என்ற நிலைக்கு சரிந்துவிட்டதால் அமெரிக்காவின் பொருளாதாரப் பலத்திற்கு இன்று ரஷ்யா எவ்வகையிலும் நிகரில்லை என்றாகிவிட்டது. ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகள் எல்லாம் 30,000 டாலரிலிருந்து 37,000 டாலர் வரை சராசரி வருமானம் காட்டுகின்றன. பொருளாதாரத்தில் அமெரிக்காவிற்கு



நெருக்கமாக வந்தாலும் அரசியல் மற்றும் இராணுவ பலமென்று பார்க்கும் பொழுது அமெரிக்காதான் முதன்மை நாடாக விளங்குகிறது.

என்னுடைய சொற்பொழிவின் நோக்கமே எப்படி அமெரிக்கா இப்படியொரு பெரிய பணக்கார நாடாகத் தலையெடுத்துள்ளது என்பதை கண்டறிவதுதான். அமெரிக்காவின் சுபிட்சத்தைப் பற்றி தியான மையத்தில் பேசுவது எப்படிப் பொருந்தும் என்ற கேள்வி அன்பர்கள் மனதில் எழலாம். இச்சமயத்தில் மதர் சர்வீஸ் சொஸைட்டியின் செயல்பாடுகளைப் பற்றி இங்கே ஒரு விளக்கம் கொடுத்தால்தான் இச்சந்தேகத்தை நிவர்த்தி செய்ய முடியும். அன்னை ஸ்ரீ அரவிந்தருக்-காக தியான மையங்கள் நடத்துவது மட்டும்தான் மதர் சர்வீஸ் சொஸைட்டியின் வேலை என்றில்லை. அன்னை ஸ்ரீ அரவிந்தருடைய ஆன்மீகக் கருத்துகளில் அங்கே ஆராய்ச்சியும் நடக்கிறது. அவ்வான்மீகக் கருத்துகளை இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும், உலகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் எப்படிப் பயன்படுத்திக் கொள்வது, உலகத்தில் போரில்லாமலும், மூன்றாம் உலகப் போரோ, அணு ஆயுத பிரயோகமோ நிகழாமலும், பயங்கரவாதம் வெளிப்படாமலும் எப்படிப் பூரண அமைதியையும், சமாதானத்தையும் கொண்டு வருவது, business management துறையில் அன்னை பகவானுடைய ஆன்மீகக் கருத்துகளை எப்படி apply செய்வது என்றெல்லாம் ஆராய்ச்சி நடக்கிறது. இவ்வாராய்ச்சியின் விளைவாக சமூகம் எப்படி வளர்கிறது, முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் எப்படி நடைபெறுகின்றன, இவற்றை நிர்ணயிப்பது எது என்ற வகையில் பல principles of development, அதாவது வளர்ச்சி விதிமுறைகளை மதர் சர்வீஸ் சொஸைட்டியில் கண்டுபிடித்துள்ளோம்.

பொருளாதார முன்னேற்றம் கண்டுள்ள எந்த நாடும் தெரிந்தோ, தெரியாமலோ இந்த வளர்ச்சி விதிமுறைகளைக் கடைபிடித்துத்தான் அம்முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பது எங்களுடைய அனுமானமாகத் திகழ்கிறது. தெரியாமல் கடைபிடித்தாலே முன்னேற்றம் வருமென்றால், தெரிந்து கடைபிடித்தால் முன்னேற்றத்தை மேலும் விரைவு

படுத்த முடியுமென்றாகிறது. ஆகவே இந்தியாவின் வளர்ச்சியை விரைவு படுத்த நாங்கள் கண்டறிந்த வளர்ச்சி விதிமுறைகளின்படி தீட்டப்பட்ட ஆக்கப்பூர்வமான திட்டங்கள் பலவற்றை இந்திய அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளோம். பசுமைப் புரட்சி நம் நாட்டில் வெற்றியடையக் காரணம் என்ன, கிராமப்புறங்களில் விவசாயிகள் வருமானத்தை உயர்த்த விவசாயத்தையும், தொழிலையும் எப்படி இணைக்கலாம், நாடு தொழில் மயமாவதை விரைவுபடுத்துவது எப்படி, தொழில் முனைவர்களை உருவாக்குவது எப்படி, புதிதாக வந்துள்ள கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் புரோகிராமிங் மற்றும் இன்டர்நெட்டை வைத்துக் கொண்டு தொழில், கல்வி, தொலைதொடர்பு மற்றும் ஆபீஸ் அட்மினிஸ்ட்ரேஷன் என்றெல்லா-வற்றையும் எப்படி மேம்படுத்தலாம் என்று பல திட்டங்களைத் தீட்டி வழங்கி உள்ளோம்.

இந்தியாவினுடைய பழம்பெரு ஆன்மீகம் மீண்டும் மலர்ச்சி பெற்று, இந்தியா உலகத்தின் குருவாகத் தலையெடுக்க வேண்டும் என்றால், முதலில் இந்நாட்டின் வறுமை போக வேண்டும். வறுமை போய் சுபிட்சம் வர வேண்டும் என்று பகவானே குறிப்பிட்டுள்ளார். மக்களுடைய அடிப்படைத் தேவைகள் பூர்த்தியான பின்னர்தான் அவர்கள் ஆன்மீக விஷயங்களைக் கருத முன்வருவார்கள். வருமான பற்றாக்குறை என்ற பெரிய பிரச்சினை தீராமலிருக்கும் பொழுது, மக்களுடைய கவனம் முழுவதும் அதன்மேல்தானிருக்கும். வருமானத்தை உயர்த்திக் கொள்ள ஆன்மீகம் என்ன வழி சொல்கிறது என்று கேட்டு, அதற்காகத்தான் ஆன்மீகத்தை நாடுவார்களேயொழிய, வருமான பிரச்சினைகளிருக்கும் பொழுது ஆன்மீகத்தை ஆன்மீகத்திற்காக மக்கள் நாடுவது மிகக் குறைவு.

இக்காரணங்களால்தான் அன்னையின் அருள் நமக்குக் கொடுக்கக் கூடிய ஆன்மீகப் பரிசுகளான ஆன்மீக ஞானம், ஆன்மீக பலம், ஆன்மீக அமைதி, ஆன்மீக மகிழ்ச்சி, ஆன்மீக பரிசுத்தம் போன்றவற்றைவிட, அன்னையின் அருளால் நமக்குக் கிடைக்கக்கூடிய பொருளாதார உயர்வு, உடல்நல முன்னேற்றம், சமூக உயர்வு, வேலைவாய்ப்பு, திருமணம்



கைக்கூடி வருதல் போன்ற லோகாயதமான விஷயங்களை, கர்மயோகி அவர்கள் அதிகம் வலியுறுத்தி எழுதுகிறார். ஏனென்றால் இப்படிப்பட்ட வாழ்க்கைத் தேவைகள்தாம் நம் மனதை தற்பொழுது ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. இவைகள் பூர்த்தியான பின்னரே இவற்றைத் தாண்டிய ஆன்மீக விஷயங்களில் நாம் அக்கறை எடுத்துக் கொள்வோம்.

இக்கண்ணோட்டத்தின் காரணமாகத்தான் அன்னையின் அருளை அதிர்ஷ்டமாகப் பெறுவது எப்படி என்று விளக்கும் வகையில் அதிர்ஷ்டம் என்ற புத்தகத்தை கர்மயோகி அவர்கள் எழுதினார். அதைத் தொடர்ந்து 100,000 dollars என்ற பெயரிலும், 50 லட்சம் என்ற பெயரிலும், Honey Let Us Make Money என்ற பெயரிலும் prosperityஐ உயர்த்திக் கொள்ளும் வழிகளைப் பற்றிய மதர் சர்வீஸ் சொஸைட்டி வெளியீடுகள் அடுத்தடுத்து வந்தன.

இதே கண்ணோட்டத்தின்படி பார்க்கும்பொழுது அமெரிக்க நாடு எப்படி முன்னேறியுள்ளது, அந்நாட்டின் முன்னேற்றத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் என்ன, எந்தெந்த வளர்ச்சி விதிமுறைகளை அவர்கள் கடைப்பிடித்து இம்முன்னேற்றத்தைக் கொண்டு வந்துள்ளார்கள் என்பதை எல்லாம் நாம் கண்டறிவது நம் நாட்டின் முன்னேற்றத்தை விரைவுபடுத்த உதவும் என்றாகிறது. அமெரிக்கா பொருளாதாரத்தில்தான் முன்னணியிலிருக்கிறது, மற்ற எந்தச் சிறப்பும் அங்கே இல்லை என்று நாம் புரிந்து கொண்டால் அது உண்மையாகாது. ஏனென்றால் பரிணாம வளர்ச்சியிலும், அதாவது evolutionary process என்பதிலும் அந்நாடுதான் முன்னணியிலுள்ளது. ஆன்மீகச் சிறப்புப் பொருந்திய பழம்பெரு நாடான நம் நாட்டைவிடப் பரிணாம வளர்ச்சிக்குக் கூட அமெரிக்காதான் தலைமைதாங்குகிறது என்ற விஷயம் அன்பர்களுக்கு அதிர்ச்சியாகவிருக்கலாம். அன்னையும், பகவானும் இந்தியாவில் இருந்து கொண்டுதான் சத்தியஜீவியத்தை பூமிக்கு இறக்கிக் கொண்டு வந்து உலகத்தின் பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்கு வழி செய்தார்கள். அம்முயற்சி ஆன்மீக அளவில் அவர்கள் எடுத்த பெருமுயற்சி. சமூகத்தின் பரிணாம வளர்ச்சி என்பது

பிஸிக்கல் லெவலில் நடந்து கொண்டிருக்கிறது. அவ்வளர்ச்சிக்கு மிகவும் receptiveஆன சூழ்நிலை தற்பொழுது அமெரிக்காவில்தான் நிலவுகிறது. பரிணாம வளர்ச்சிக்கு உதவக்கூடிய சூழ்நிலை என்ன என்று தெரிந்து கொள்ள அன்பர்கள் ஆர்வமாக இருக்கலாம். பரிணாம வளர்ச்சி என்பது புதியது உருவாவது. அமெரிக்கர்கள் புதிய விஷயங்களை எப்பொழுதும் நாடிக் கொண்டிருக்கிறார்கள். Change, மாற்றம் என்பதுதான் அந்நாட்டின் உயிரோட்டமாக அமைந்துள்ளது. பழமை, பாரம்பரியம் என்பதை இந்தியா போன்ற நாடுகள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பதைப் போல, change அல்லது மாற்றத்தை அமெரிக்கா கெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ளது. இப்படிப் புதியதை நாடும் மனப்பான்மை பரிணாம வளர்ச்சிக்கு உரிய மனப்பான்மையாகும். பரிணாம வளர்ச்சியின் இரண்டாவது அறிகுறி வரம்பில்லாத வளர்ச்சி ஆகும். வரம்பற்ற வளர்ச்சி infinity என்ற சக்தி அங்கே செயல்படுவதைக் காட்டுகிறது. அவர்களுடைய உற்பத்தித் திறன், வருமான வளர்ச்சி, அவர்கள் செய்யும் செலவு, அங்கு நிகழும் கண்டுபிடிப்புகள் என்றெல்லாமே வரம்பில்லாமல் பெருகிக் கொண்டு போகின்றன. ஒரு நாட்டில் தொட்டனவெல்லாம் வளர்கின்றன என்றால் அந்நாட்டில் நிச்சயம் evolutionary power செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றாகிறது. பரிணாம வளர்ச்சியின் மூன்றாவது அறிகுறி வளைந்து கொடுக்கும் தன்மையாகும். பரிணாம வளர்ச்சி எத்திசையில் போகிறது என்று தெரிகிறதோ, அத்திசைக்கு நாமும் மாறிக் கொள்வது நமக்கு வளைந்து கொடுக்கும் தன்மையிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா மற்ற உலக நாடுகளுடன் அதிகம் தொடர்பு இல்லாமல் தனித்து, ஒதுங்கி வாழத்தான் விரும்பியது. முதலாம் உலகப் போர் மூண்டபொழுது, “இது ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயான போர். இதற்கும், தனக்கும் சம்பந்தமில்லை’’ என்று சொல்லி, ஒதுங்கி இருக்கவே விரும்பியது. ஆனால், ஜெர்மனிதான் அமெரிக்காவை வலுக்கட்டாயமாக முதலுலகப் போரில் ஈடுபட வைத்தது.

இரண்டாம் உலகப் போர் மூண்டபொழுதும் ஒதுங்கி இருக்கவே விரும்பியது. ஆனால் ஜப்பான் வலுக்கட்டாயமாக மீண்டும்



அமெரிக்காவைப் போருக்கு இழுத்தது. ‘உலகத்தில் ஜனநாயகத்திற்கும், அடிப்படை மனித உரிமைகளுக்கும், மனித கலாச்சாரத்திற்குமே ஆபத்து வந்துவிட்டது; தான் உலகத்திற்குத் தலைமைதாங்கி தீயசக்திகளை முறியடித்து, உலகத்தைக் காப்பாற்றினால்தானுண்டு’ என்று அமெரிக்கா-விற்குப் புரிந்ததுமே, தன்னுடைய தனிமை குணத்தை அறவே விட்டுவிட்டு, நேசநாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் சோவியத் யூனியனுடன் கைகோத்து, ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளையும் முறியடித்து, தீயசக்திகளை அழித்து, உலகத்தில் மீண்டும் உண்மையும், கலாச்சாரமும், ஜனநாயகமும் தழைக்க வழி செய்தது. இப்படி உண்மைக்கு ஒத்துழைக்கும் வகையில் தன்னை அந்நாடு மாற்றிக் கொண்டது பரிணாம வளர்ச்சிக்கு உரிய மனப்பான்மை அந்நாட்டில் நிலவுகிறது என்பதைக் காட்டுகிறது. அன்று இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்த சமயத்தில் தானேற்ற உலகத்தின் தலைமைப் பொறுப்பை மேலும் சிறப்பாக நிறைவேற்ற அந்நாட்டிற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. இன்று உலகம் எதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டு, அதற்கேற்றாற்போல அமெரிக்கா தன்னை மாற்றிக் கொண்டால் இறைவனின் திருவுள்ளத்தைச் சிறப்பாக நிறைவேற்றும் பரிணாமக் கருவியாக அந்நாடு சிறப்பாகச் செயல்பட வாய்ப்புள்ளது. இன்று உலகம் உலகவொற்றுமை, உலகச் சமாதானம், போர் நிறுத்தம், அணுவாயுதங்களை விடுதல், உலக வர்த்தகம், மாசுக் கட்டுப்பாடு (pollution control), சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பு என்ற திசையில் போய்க் கொண்டிருக்கிறது. உலக வர்த்தகம், மாசுக் கட்டுப்பாடு, சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பு (environmental protection) என்ற விஷயங்களில் அமெரிக்காவின் ஒத்துழைப்பு உள்ளது. உலகவொற்றுமை, போர் நிறுத்தம், அணுவாயுதங்களைக் கைவிடுதல் என்றவிடங்களில் போதிய ஒத்துழைப்பு இல்லை. இவ்விடங்களிலும் மனம் மாறி, அந்நாடு பரிணாம சக்தியோடு ஒத்துழைத்தால், அந்நாட்டிற்குக் கிடைத்துள்ள உலகத்தின் தலைமை நீண்டநாட்களுக்கு நீடிக்கும்.

தொடரும்.....

❀❀❀

## அன்பர் கடிதம்

நாங்கள் 5 சகோதரர்கள் தனித்தனியே சமைத்து ஒரே வீட்டில், பெரிய வீட்டில், வசித்து வருகிறோம். எங்கள் வீட்டு water tank overhead tank 3வது மாடியில் ஒரு sideஇல் உள்ளது. அந்த cement tank கடந்த ஒரு வருடமாக leakஆகிக் கொண்டிருந்தது. அதைச் சீர் செய்ய நான்தான் முயல வேண்டும். நான் செய்ய வேண்டும் என்றால் 'முடியாது', மீதிச் சகோதரர்கள் பார்க்கட்டும் எனக் கூறிக் கழித்துவிட்டேன். இருப்பினும் தண்ணீர் லீக் ஆகிறது. என் மனைவி என்னிடம் அதைச் சரி செய்ய அடிக்கடி கூறினார். ஆனால் எனக்கோ, இழுப்பு பிராப்ளம். வேலை செய்தால் அடிக்கடி மாடி ஏறி, டேங்க் மேற்பார்வை பார்க்க வேண்டும். இதனால் என் உடல்நலத்திற்குச் சரி வாராது. இருப்பினும் இந்த மேட்டரை ஸ்ரீ அன்னையிடம் சமர்ப்பித்தேன். கடந்த 12 நாட்கள் நான் ஊரில் இல்லாத சமயம் என் சகோதரர் ஒருவர் வேலையாட்களை வைத்து வாட்டர் டேங்கினைச் சரி செய்து, வாட்டர் லீக்கேஜை நிறுத்தினார். ஊரில் இருந்து திரும்பி வீட்டிற்கு வந்தபோது, இந்த ஆச்சர்யத்தை, அற்புதத்தைக் கேள்விப்பட்டேன். ஸ்ரீ அன்னை அவர்கள் என் வாழ்வில் நடத்தியது மறக்க முடியாத பேரனுபவம் ஆகும்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சட்டத்தால் (law or rule) நியாயத்தை வழங்க முடியாது. அவற்றால் அநியாயத்தைத் தடுக்க முடியும். அவற்றாலும் நியாயம் வழங்க முடியும். அதற்கு, சட்டத்திற்கு பண்பு, நேர்மை, தெளிவு, நியாய உணர்வு தேவை.





**You have a diamond look.**
**It used to be one of Infinity.**

உங்கள் பார்வை வைரமாக உள்ளது.
ஏற்கனவே அது அனந்தமாக இருக்கும்,

என்று சத்பிரேம் அன்னையிடம் கூறுகிறார்.

- ✡ **கண்பார்வை ஆத்மாவை வெளியிடும்.**
- ✡ **சுறுசுறுப்பான சூட்சுமமுடையவருக்கு அடுத்தவர் பார்வையில் அவர் யார் எனத் தெரியும். நல்லவர், கெட்டவர், கோபக்காரர் என்பவை தெரியும்.**
- ✡ **மனவளர்ச்சியால் இந்த சூட்சுமம் மங்கிப்போகும்.**
- ✡ **மனம் முகத்தின் குறியை உணரும். முகம் உணர்ச்சியை வெளிப்படுத்தும்.**
- ✡ **சந்தோஷம் புன்னகையாக வருவதை உதடு காட்டும்.**
- ✡ **சாப்பாட்டு ருசியுள்ளவர் உதடு அதைத் தவறாமல் வெளியிடும்.**
- ✡ **பகவானை நெருங்கும்பொழுது அனந்தத்தின் அன்பலைகளில் மிதப்பது தெரியும்.**

  **எல்லையுள்ளது சிறியது.**

  **சிறியது மிகச்சிறியதானால் முனை கூராகும்.**

  **பொறாமைக்காரர் அருகில் வந்தால் உள்ளத்தில் முள் குத்துவதுபோல் இருக்கும்.**

  **சிறியது பெரியதானால் எல்லை விரிவடையும்.**

  **எல்லை, எல்லையைக் கடந்து விரிவடைந்தால் சூழல் இதமாக இருக்கும்.**

  **எண்ணம் எல்லையை இழந்தால் சுதந்திரம் அனந்தமாகும்.**

  **அனந்தத்தை எல்லையற்ற ஆனந்தம்எனத் தத்துவம் கூறுகிறது.**

  **பகவானிடமிருந்து எழும் சூழலில் எதற்கும் எல்லையில்லை.**
- ✡ **எல்லையற்றது அனந்தம்.**

- ✡ **அன்னையின் பார்வை - ஆத்ம எழுச்சி - அனந்தமாக இருந்தது என்பது அதுவே.**
- ✡ **வைர ஒளி தீயசக்தியைக் கரைக்கவல்லது.**
- ✡ **வைர ஒளிக்கு அனந்தம் அஸ்திவாரமாக இருக்க முடியும்.**
- ✡ **வைரம் என்பது ஒளி பெறும் கூர்மை.**
- ✡ **அன்னையின் பார்வை வைர ஒளியாக உள்ளதுஎனச் சத்பிரேம் கூறுகிறார்.**
  **அது பட்டால் தீயசக்திகள் கரையும்.**
  **ஆசிரமத்திற்குத் தொந்தரவு கொடுத்த இளைஞன், ஆஸ்த்ரேலியாவைச் சார்ந்தவன்; அன்னை அவனை தம் நாட்டிற்குப் போகச் சொன்னார்.**
  **மறுத்துவிட்டான்.**
  **காளியை அவன் தலையில் நடனம் செய்ய அன்னை ஆணை பிறப்பித்தார்.**
  **காளி ஆணையை நிறைவேற்றினாள்.**
  **இளைஞன் மனம் மாறி புதுவை விட்டகன்றான்.**
- ✡ **செய்வினை செய்த இடத்தில் அன்னையின் சிம்பல், மலர், பிரசாத பாக்கெட் ஆகியவற்றுள் ஒன்று வந்தால் செய்வினை கரையும்.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எந்த விஷயம் மீண்டும் மீண்டும் ஆயிரம் முறை நம் மனத்தைத் தொடுகிறதோ, அந்த விஷயத்தில் நமக்கு அதிகபட்ச அக்கறை உள்ளது என்று பொருள். அதுவே நம் ஜீவியத்தின் நிலை.

***இடையறாது நம் மனத்துள் உள்ளது நம் ஜீவிய நிலை.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# டிரான்ஸ்பர்

"ஈசனோடாயினும் ஆசை அறுமின்" என்பது பெரியோர் வாக்கு. தியான மையத்தில் சிறப்பாக வேலை செய்பவர், அது சேவையாகும் பொழுது மையத்தின் அம்சத்தை அறிகிறார்கள். மையத்தில் அன்னை இருப்பது நிதர்சனமாகத் தெரியும். அதைக் கண்ட அன்பர், அதை விட்டகலமாட்டார்.

✡ **தான் கண்ட அன்னை மையத்திலிருப்பதை அவர் மனம் அறி-கிறது.**

✡ **மையத்திலிருப்பதாக உணர்ந்த அன்னை இருக்குமிடம் எது?**

**மையம் என்பதிலையமில்லை.**

**அதைக் கடந்த உண்மை எது?**

**மையத்தில் அன்னையைக் காண்பது மனத்தில் உள்ள அன்னை.**

அப்படிப்பட்ட ஓர் அன்பருக்கு டிரான்ஸ்பர், பிரமோஷன் வந்தது. மனம் மையத்தை விட்டகலப் பிரியப்படவில்லை. இந்தச் சிக்கலான நேரத்தில் அறிய வேண்டியது என்ன? டிரான்ஸ்பர் அன்னை போட்டது என ஏற்பது சரிஎனக் கேள்விப்பட்டது முதல் மனம் டிரான்ஸ்பரை ஏற்றது. வேலையில் சேர ஒரு வாரம் காலம் உண்டு. மனம் டிரான்ஸ்பரை ஏற்றவுடன், டிரான்ஸ்பர் அன்னையை ஏற்று, பிரமோஷனுடன் மீண்டும் பழைய இடத்திற்கே டிரான்ஸ்பர் வந்தது.

*அன்னையை ஏற்கும் பொழுது*
*அவர் நம் மன அபிலாஷைகளை ஏற்கிறார்.*

✡ **நம் இஷ்டத்திற்கு அன்னை செயல்படுவதை எதிர்பார்ப்பதை விட அன்னை இஷ்டத்திற்கு நாம் செயல்படுவது அன்னைக்-குரிய முறை.**

✡ **மையத்திலிருந்து மனம் விலகி நம் உள்ளே டிரான்ஸ்பராக வேண்டுவது சிறப்பு.**

❀❀❀

# ஆத்மாவின் குரல்

குரல்கள் பல வகையின. அபயக்குரல், நெஞ்சு நிறையும் நெகிழ்ந்த குரல், ஆத்மாவின் அழைப்பு, ஜீவன் மலர்ந்த சிறப்பு, அன்னையே உள்ளிருந்து அழைக்கும் அற்புதம்என அவை பல வகையானவை. எவரானாலும், அன்னையை அறியாதவரானாலும், ஆபத்தில் எழுப்பும் குரல் அன்னையை எட்டி பதிலைப் பலனாகக் கொண்டு வரும்.

✡ **அது வாய்ச் சொல், வெறுஞ் சொல். அதற்குப் பிரச்சினையை முழுவதும் தீர்க்கும் திறனுண்டு.**

சொல் வாயிலிருந்து தடம் மாறி நெஞ்சுக்குப் போய், அங்கிருந்து எழுந்தால் பிரச்சினை எழுப்பும் பீதி கரைந்து, திரை விலகி, பிரச்சினையின் ஆன்மீக ரூபமான வாய்ப்பு எழும்.

✡ **எண்ணம் விலகி எழும் குரல் பிரச்சினை வாய்ப்பெனக் காட்டும்.**
***மனம் அழைத்தால் வாய்ப்பு பதில் கூறும்.***

குரல் எண்ணத்தைக் கடந்தும் செல்லும். எண்ணத்தைக் கடந்த நிலை மனத்தைக் கடந்தால், மனம் திறந்து மறைந்துள்ள ஆத்மாவைக் காட்டும். ஆத்மாவுக்கு ஆர்வமெழுந்தால் அது அன்னையை அழைக்கும்.

✡ **ஆத்மாவுக்கு பிரச்சினையில்லை, வாய்ப்பு பொருட்டில்லை.**

**குரல் ஆத்மாவிலிருந்து எழும் பொழுது குரலைக் கேட்டுக் கொள்வது பரமாத்மா.**

**ஆத்மாவின் குரல் ஜீவனைப் பரவசமாக்கும்.**

**பரவசமான நிலையில் எழும் குரல் பலரும் கேட்கும் குரல் - பலருள்ளும் உள்ள ஆத்மா கேட்கும் குரலாகும்.**

❀❀❀